

தொண்டமான்
கண்ட

# வெற்றியின் இரகசியம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mr. M. Rajendran
upper Tonnacombe

தொண்டமான் கண்ட

# வெற்றியின் இரகசியம்

வெளியிட்டவர்:
வி. இராதாகிருஷ்ணன்
நுவரேலியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title : VETRIYIN RAHASIYAM
(SECRET OF SUCCESS)

No of Pages : 80

Print : Offset Process

First Edition : 1990 – 5000 copies

Cover Design : S. DORAISAMY

PUBLISHED BY: V. RADHAKRISHNAN, J.P.
NUWARA-ELIYA.

PRINTED BY: MILAKSH GRAPHIC MEDIA
6 Abaya Place, Colombo 9
Phone : 693147

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுற்றுலாத் துறை, கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் பத்து மாடிகள் கொண்ட காரியாலயத்தில் ஒன்பதாவது மாடியறையில் கம்பீரமாக வீற்றிருக்கிறார் இ.தொ.கா. வின் பெருந்தலைவரும் அமைச்சருமான மாண்புமிகு சௌமியமூர்த்தி தொண்டமான்.

## தொண்டா நீ வாழ்க

வாழ்க நீ எம்மான்! எங்கள்
மலையக நாட்டில் எல்லாம்
தாழ்வுற்றுத் தமிழ் மக்கள்
ததிகெட்டுத் தவித்த காலை
சூள்கொட்டிப் போருக் காகத்
தோற்றினாய் இதொ காவை
தோள்தட்டி நின்றாய், காத்தாய்
தொண்டா நீ வாழ்க வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இவர் பாதங்களில் ஒரு மலர்

தேர்தல் காலங்களில் தலைவர் தொண்டமான் அவர்களை கூட்டங்களிலே கண்டிருக்கிறேன். அவருடைய தொழிற்சங்க பேச்சுக்களையும் அரசியல் பேச்சுக்களையும் தூரநின்று கேட்டிருக்கிறேன். அவரை நெருங்கியது கிடையாது.

1977ஆம் ஆண்டுவரை நான் தொழிற்சங்க நடவடிக்கைகளிலோ அரசியல் நடவடிக்கைகளிலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை ஈடுபடுத்திக்கொள்ளவில்லை. 1980ஆம் ஆண்டில் தான் அந்த திருப்பம் என் வாழ்வில் ஏற்பட்டது.

எனது பகுதியில் ஏற்பட்ட ஒரு விவசாயக் காணிப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டிய நெருக்கடியான சூழ்நிலையில் எனது இனிய நண்பரும், இ.தொ.கா. வின் கல்வி இயக்குநருமான திரு. எம். சிவலிங்கம் என்னை தலைவர் தொண்டமான் அவர்களிடம் அழைத்துச் சென்றார்.

முதன்முதலாக, ஓர் அமைச்சரைப் பார்க்கப் போகிறோம் என்ற பயமும் பரபரப்பும் என் உள்ளத்தில் குடிகொண்டன. நான் ஒரு சாதாரண மனிதன். என்னோடு அவர் இதமாகப் பேசுவாரா? ஒரு தனி மனிதனுடைய கோரிக்கைக்காக தமது நேரத்தைச் செலவிடுவாரா? அக்கறை காட்டி ஆவன செய்வாரா? இப்படியெல்லம் எனது உள்ளம் அலைமோதியது.

மாண்புமிகு அமைச்சர் தொண்டமான் அவர்களின் விசாலமான அறைக்குள் எங்களை அழைத்துச் சென்றார் அமைச்சரின் தொடர்புச் செயலாளராக விளங்கிய திரு. பா. திருநாவுக்கரசு.

தலைவர் அவர்களை நேரில் பார்த்தபோது எனக்குள் எத்தனையோ உணர்வுகள் ஏற்பட்டன. நான் கதைகளிலே மன்னர்களைப் பற்றியும், சக்கரவர்த்திகளைப் பற்றியும் படித்திருக்கிறேன். இப்போதுதான் நான் ஒரு மன்னரை, ஒரு சக்கரவர்த்தியை நேரில் காண்கிறேன் என்ற உணர்வு தோன்றியது. ஆம். மலையகத் தொழிலாளர்களின் முடிசூடா மன்னர் அல்லவா திரு. தொண்டமான்? பத்துலட்சம் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளமெனும் சிம்மாசனத்தில் கொலு வீற்றிருக்கும் சக்கரவர்த்தி அல்லவா தலைவர் தொண்டமான்?

மாண்புமிகு அமைச்சர் ஒரு மாமன்னரைப் போலவே வெகு கம்பீரமாக அமர்ந்திருந்தார். தோற்றம் ஒரு மன்னனைப் போல. ஆனால் முகத்தில் சாந்தம் ஒரு துறவியைப் போல.

''அமருங்கள்'' என்று அவர் கூறியபோது அந்த குரலில் அன்று நான் கண்ட கனிவு இன்றும் என்னை உருக்குகிறது.

எனது பிரச்சினைகளை எடுத்துரைத்தேன். அமைதியாக நான் கூறியவற்றை எல்லாம் செவிமடுத்தார். அன்றே ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டார். பல அமைச்சர்கள், நான் முன்வைத்த விஷயத்தில், எதிர்ப்புத் தெரிவித்தனர் என்று பின்பு அறிந்தேன். ஆயினும் தலைவர் விட்டுக் கொடுக்கவில்லை.

எனது கோரிக்கை சரியானது, நியாயமானது, நேர்மையானது என்பதை உணர்ந்து கொண்ட தலைவர், இறுதிவரை போராடி எனக்கு நியாயம் கிடைக்க வகை செய்து கொடுத்தார்.

தொண்டமான் என்பவர் ஒரு சாதாரண மனிதர் அல்லர் என்பதை அன்றே நான் புரிந்து கொண்டேன். அவர் ஒரு சராசரி அமைச்சரல்லர். மகா சமர்த்தர் என்பதையும் நான் உணர்ந்து கொண்டேன். இவருடைய சாதனைகளால் இ.தொ. கா. என்ற அமைப்பு எப்படி இவ்வளவு தூரம் வளர்ச்சி பெற்றது? எப்படிக் கட்டிக்காக்கப்பட்டிருக்கிறது? இன்னோரன்ன விஷயங்கள் எல்லாம் எனக்கு ஒரே நொடியில் புலனாகிவிட்டன.

இதன் பின்னர் 1982 ஆம் ஆண்டில் இ.தொ. காவின் மாநாடு நுவரேலியாவிலே நடைபெற ஏற்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டது. அதிலே நான் முழுமையாக என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். இந்த நன்முயற்சியில் எனது அருமை நண்பர் திரு. வி.எஸ்.ஆர். சுப்பிரமணியமும் என்னுடன் சேர்ந்து கொண்டார். மாநாட்டின் வெற்றிக்கு எங்கள் பங்களிப்பைப் பூரணமாக வழங்கும் சந்தர்ப்பம் எமக்கு கிடைத்தது. அதனால் தலைவரின் அபிமானமும் எமக்கு கிடைத்தது.

இதன் பின்னர் தான் தலைவர் ஐயா அவர்களிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் அவரைப்பற்றி அருகிலிருந்தே அறியும் வாய்ப்பும் எனக்கு ஏற்பட்டன. அவரோடு பழகப் பழக அவருடைய பெருமைகள் எத்தனை மகோன்னதமானவை என்பது எனக்கு தெரிய வந்தன. அவருடைய உயர்ந்த பண்புகளும் உன்னதமான சிந்தனைகளும் எனக்குப் புரியலாயின. நான் ஐயா அவர்களைப் புரிந்து கொண்டது போல, ஐயா அவர்களும் என்னைப் பற்றி அறிந்து கொண்டார் என்றும்



அமைச்சர் தொண்டமானுடன் அவர் தொண்டன் திரு. வி. இராதாகிருஷ்ணன் காணப்படுகிறார். பக்கத்தில் அவர் பாரியார் ஜானகி இராதாகிருஷ்ணன், புதல்வர் ராஜாராம் ஆகியோர் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கிறேன். என்னுடைய சமூக சேவையின் பரிமாணங்களை அறிந்து கொண்டமையினால் தான் அவர் எனக்கு ஜே.பி. பட்டத்தை சிபார்சு செய்து வாங்கித்தந்தார் என்று நினைக்கிறேன். நன்றியுணர்வால் நெகிழ்கிறேன்.

தலைவர் ஐயா அவர்களின் இல்லத்துக்கு செல்லும் பல சந்தர்ப்பங்கள் எனக்கு ஏற்பட்டதுண்டு. இப்படிச் சென்று வந்த காலத்தில் ஐயா அவர்களின் இல்லத்தில் ஒரு தீபாவளித் தினத்தன்று விருந்துண்ணும் வாய்ப்பும் எனக்கு கிடைத்தது.

ஐயா அவர்களின் வாழ்க்கைத் துணைவியார், 'ஆத்தாள்' என்று நாம் எல்லோரும் அன்புடன் அழைத்து வந்த பெருமாட்டி கோதையம்மாள் அன்று விருந்து பரிமாறினார். அவர் எம்மை உபசரித்து ஆதரித்த முறை என் வாழ்நாளில் என்றுமே மறக்க முடியாததொன்றாகும்.

அன்று எனக்கு இன்னொரு உண்மை விளங்கியது. ஐயா அவர்களின் சமூகத் தொண்டின் வெற்றி, அரசியல் வாழ்வின் வெற்றி எல்லாம் அன்று ஆத்தாள் இட்டுவைத்த அத்திவாரத்தின் பிரதிபலனே என்பது தான் நான் உணர்ந்த உண்மையாகும். ஆத்தாள் போன்ற ஒரு 'தெய்வம்'. ஒரு தலைவரை எவ்வளவு தூரம் உயர்த்தி வைக்க முடியும் என்பதையும் அந்த தீபாவளியன்று நான் கண்டு கொண்டேன்.

சமீப காலங்களில் தவைர் ஐயா அவர்கள் மலையக மக்களின் அரசியல் உரிமைகளையும் சமூக அந்தஸ்துகளையும் ஸ்திரப்படுத்தும் காரியங்களில் மேற்கொண்ட நடவடிக்கைகள் எவ்வளவு சாமர்த்தியமானவை, எவ்வளவு தீர்க்கதரிசனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ந்தவை என்று நாம் எண்ணி வியப்புற வேண்டியுள்ளது. இந்த நடவடிக்கைகள் இளைஞர்களான நமது வருங்கால சந்ததியினரை இந்நாட்டில் சரிநிகர் சமானமான உரிமையுள்ளோராக ஆக்கியிருக்கின்றன. உதாரணமாக, பிரஜா உரிமைப் பிரச்சினை, வாக்குரிமைப் பிரச்சினை, காணிப் பங்கீட்டுப் பிரச்சினை, மலையக இளைஞருக்கு பொலிஸ் பயிற்றி, ஆசிரியர் நியமனம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

1913 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30 ஆம் திகதி இவ்வுலகில் அவதரித்த தலைவர் ஐயா அவர்களுக்கு இந்த ஆகஸ்டு 30 ஆம் திகதி 77 ஆண்டு நிறைவு பெறுகின்றது. அவரது 78 ஆவது பிறந்த தின விழா முதன் முறையாக நுவரேலியா மாநகரில் பெருவிழாவாகக் கொண்டாடப் படுகிறது. அது தொண்டமான் என்ற தனி மனிதரின் விழா அல்ல. பத்து லட்சம் இந்திய வம்சாவளி மக்களின் உரிமை விழா. மலையகத் தோட்டத் தொழிலாள மக்களின் வெற்றி விழா.

இந்த வெற்றி விழாவை ஞாபகப்படுத்தும் முகமாக ''தொண்டமான் கண்ட வெற்றியின் இரகசியம்'' என்ற இந்தச் சிறு நூலினை நான் வெளியிட்டு தலைவர் ஐயா அவர்களின் பாதார விந்தங்களில் ஒரு மனோரஞ்சித மலராகச் சூட்டி அஞ்சலி செய்கின்றேன். விடைபெறுகின்றேன். வணக்கம்.

வி. இராதாகிருஷணன், ஜே.பி.

நுவரேலியா
30.8.1990.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியின் இரகசியம்

அரசியலிலும் தொழிற் சங்கத் துறையிலும் பல அரிய சாதனைகளை நிலைநாட்டி, பெரும் வெற்றி வீரராகத் திகழ்கிறார் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், இலங்கையில் வாழ்ந்து மறைந்த தமிழ் அரசியல் தலைவர்கள் பலர். வாழ்ந்துகொண்டிருக்கும் அரசியல் வாதிகள் சிலர். இவர்கள் அனைவரையும் மிஞ்சியவராகவும் விஞ்சியவராகவும் விளங்குகிறார் திரு. தொண்டமான்.

மலைநாட்டில் வாழும் தோட்டத் தொழிலாளர்களின் தொழிற் சங்கப் பிரதிநிதியாக அரசியல் அரங்கில் பிரவேசித்த திரு. தொண்டமான் இன்று இலங்கை முழுவதிலும் உள்ள தமிழர்க
ளுக்கு ஒரே பிரதிநிதியாக, அமைச்சரவையில் அங்கம் வகிப்பதோடு, இலங்கையின் தேசியத் தலைவர்களுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவராகவும் உயர்ந்து நிற்கிறார். அவர் பெற்றிருக்கும் வளர்ச்சி வியப்பானது. அவர் அடைந்திருக்கும் வெற்றி மகத்தானது.

திரு. தொண்டமானுடைய வெற்றியின் இரகசியம் தான் என்ன? What is the secret of his success? அவர் எப்படி வெற்றிக்கு மேல் வெற்றியை நிலைநாட்டினார்? நிலைநாட்டி வருகிறார்? இதை விளக்குவதே இந்நூலின் நோக்கமாகும்.

ஒரு வெற்றி வீரராகத் திகழ்வதற்காக அவரைப் பாராட்டும் அதே வேளையில், அவருக்கு வெற்றி வாய்ப்பைத் தேடித்தந்த காரணிகள் வேறு பல உண்டு என்பதையும் நோக்க வேண்டும். அப்படி அவருக்கு வெற்றி வாய்ப்புகளைத் தேடித்தந்த காரணிகளில் ஒன்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற பேரமைப்பு. மற்றது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்களான தோட்டத் தொழிலாளர்களின் அசைக்க முடியாத ஒற்றுமை. இந்த இரண்டு சக்திகளும் எப்படி திரு. தொண்டமானுக்குப் பக்கபலமாக நின்று, மேற்கொண்ட காரியங்களில் எல்லாம் அவர் வெற்றிவாகை சூடத் துணைநின்றன என்பது ஒரு சுவாரஸ்யமான வரலாறு ஆகும்.

## வாழ்க்கையும் இலட்சியமும்

எந்த ஒரு தலைவரும் அவர் கடைப்பிடிக்கும் உன்னதமான இலட்சியத்தை வைத்தே உருவாக்கம் பெறுகிறார். அவர்களுடைய குறிக்கோள் அவர் சார்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களை உயர்த்துவதாக, அவருடைய இன்னல்களைப் போக்குவதாக, அவர்களுக்கு நல்வாழ்வும் சுதந்திரமும் தேடித்தருவதாக இருக்க வேண்டும். அத்தோடு அந்தத் தலைவர் தமது இலட்சியத்தை அடைவதற்காக உண்மையுடனும், உறுதியுடனும், உளத்தூய்மையுடனும் சோர்வின்றி ஓயாது உழைப்பவராக, அதுவும் விசுவாசத்துடன் உழைப்பவராக, இருக்க வேண்டும். அப்படியிருந்தால் அந்தத் தலைவரை வெற்றி தானாகவே தேடிவரும்.

திரு. தொண்டமான் அப்படியான ஓர் இலட்சியத்தை, அப்படியான ஒரு குறிக்கோளை முன்வைத்துப் பணிபுரிந்தாரா? அவருடைய வாழ்க்கையின் ஆரம்பகாலத்தை ஆராய்ந்தால் என்ன தெரிகிறது?



ஹட்டனில் நடைபெற்ற இ.தொ.கா. பொன்விழாவின் போது நாட்டின் ஜனாதிபதி பிரேமதாசாவும் மலையகத்தின் தலைவர் தொண்டமானும் அருகருகே அமர்ந்திருந்த காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டமான் ஒரு தனவந்தருக்கு மகனாகப் பிறந்தவர். அதாவது அவர் பிறவிச் செல்வர். ஆனால் அவருடைய தந்தையார் குமாரவேல் சிறுவயதிலேயே, இந்தியாவிலிருந்து இலங்கை வந்து பெருங் கஷ்டங்களை அனுபவித்து, சாதாரண தொழிலாளியாகக் காப்பித் தோட்டங்களிலும் தேயிலைத் தோட்டங்களிலும் வேலை செய்து, பின்னர் கங்காணியாகப் பதவி வகித்து, இரவும் பகலும் பாடுபட்டு உழைத்துப் பணந்தேடியவர். கையில் பணம் வந்ததும் தாம் வேலைபார்த்த அதே தோட்டத்தை வெள்ளைக்கார முதலாளியிடமிருந்து விலை கொடுத்து வாங்கித் தாமும் ஒரு தோட்ட முதலாளி ஆனவர். தோட்ட முதலாளியான பின்னர் மேலும் பணம் தேடிக்கொண்டு குபேர வாழ்க்கை வாழ்ந்தவர். வெள்ளைக்காரத் தோட்ட்த்துரைமார்களைப் போல், தாமும் மோட்டார் கார் வைத்து ஓடியவர்.

அந்தக் காலத்தில் இப்படியான ஒரு பணக்காரருக்கு, தோட்டச் சொந்தக்காரருக்கு பிள்ளையாகப் பிறந்த தொண்டமான் எத்தகைய செல்வச் செருக்குடனும், இறுமாப்புடனும், பெருமையுடனும் வாழ்ந்திருக்க வேண்டும். ஆனால் தொண்டமான் அப்படி வாழவில்லை. மாணவராக இருக்கும் போதே அடக்கத்துடனும், பணிவுடனும், நல்ல பண்புகளுடனும் தான் காணப்பட்டார். அதற்கு அவர் தந்தையார் வளர்த்த வளர்ப்பும் ஒரு காரணமாகும்.

வெள்ளைக்காரரிடமிருந்து வாங்கிய வெவண்டன் தோட்டத்தில், சகல விதமான வசதிகளுடனும் வெள்ளைக்காரர் வாசம் செய்த அழகான பெரிய மாளிகையும் இருந்தது. அந்த மாளிகையில் தான் தந்தை குமாரவேலும், மகன் தொண்டமானும், எத்தனையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையாட்கள் புடைசூழ வசித்து வந்தார்கள். ஆனாலும் சிறுவன் தொண்டமானுக்கு ஏழைகளான தோட்டத் தொழிலாளர்கள் வாழ்ந்த லயன் வீடுகளைச் சென்று பார்ப்பதிலும் தொழிலாளர்களின் கஷ்டநஷ்டங்களை அறிவதிலும் நாட்டமிருந்தது.

ஒரு நாள் தோட்டத்து லயன்களுக்கு சென்றபோது அங்கு தொழிலாளர்—ஆண்களும், பெண்களும், குழந்தைகளும்— வாழ்ந்த அவல வாழ்க்கையைக் கண்டார் தொண்டமான். அவருடைய இளகிய உள்ளம் அப்போது சிந்திக்கத் தொடங்கியது.

அவர் இவ்வாறாக எண்ணினார்:

''நான் பங்களா வாசியாக இருப்பதால் சுகமாக வாழ்கிறேன். என் தந்தை பணக்காரராக இருப்பதால் எனக்கு கஷ்டம் எதுவும் தெரியவில்லை. நான் பணக்காரக் குடும்பத்தில் பிறக்காமல் ஏழைத் தொழிலாளியின் குடும்பத்தில் பிறந்திருந்தால்! இந்த தொழிலாளர் களைப்போலத்தானே நானும் லயன் வீட்டில் வாழ்ந்து, இவர்களைப் போலவே கஷ்டப்பட்டிருப்பேன். நான் பெரியவனானதும் என்னை அர்ப்பணித்து இவர்களுக்காகப் பாடுபடவேண்டும்; இவர்களுடைய உயர்வுக்காக உழைக்க வேண்டும். இதுவே என் வாழ்க்கை இலட்சியமாக அமைய வேண்டும்.''

இந்த எண்ணமும் இலட்சியமும் மாணவப் பருவத்திலேயே தொண்டமானின் உள்ளத்தில் ஸ்திரமாகப் பதிந்து விட்டன. அதனாலேயே அவர் பெரியவரானதும் ஏதாவது உத்தியோகம் பார்க்கவோ தொழில் தேடவோ விழையவில்லை. பொது வாழ்க்கையிலேயே தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மைச்சர் தொண்டமான் ஜப்பான் நாட்டுக்கு விஜயம் செய்த போது ஜப்பானிய தொழில் பிரமுகர்கள் அவருக்குப் பரிசு அளித்து கௌரவித்தனர். அமைச்சருக்கு அருகில் அவருடைய அந்தரங்கச் செயலாளர் திரு. பா. திருநாவுக்கரசும் காணப்படுகிறார்.

இந்த இடத்தில் இரண்டு மேல்நாட்டு நல்லறிஞர்களின் வாய்மொழிகள் கவனத்தில் கொள்ளத்தக்கனவாகின்றன. ஒருவர் புல்வர் என்பவர். மற்றவர் புகழ்பெற்ற எழுத்தாளராக விளங்கிய றொபேர்ட் லூயிஸ் ஸ்டீவன்ஸன் என்பவர். அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள்?

The man who succeeds above his fellows is the one who, early in life, clearly discerns his object, and towards that object habitually directs his powers. Even genius itself is but fine observation strengthened by fixity of purpose. Every man who observes vigilantly and resolves steadfastly grows unconsciously into genius.

—Bulwer

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




''எனது வாழ்வும் கால ஓட்டமும்'' என்ற ஆங்கில நூல் வெளியீட்டு விழாவின் போது, அப்போது நாட்டின் பிரதமராகவிருந்த திரு. ஆர். பிரேமதாசா தொண்டமான் அறநிதியத்துக்கு ஒரு லட்சம் ரூபா காசோலையைக் கையளிக்கிறார். பக்கத்தில் இ.தொ.கா. பொதுச் செயலர் திரு. எம்.எஸ். செல்லச்சாமி காணப்படுகிறார்.

''சிறு வயதிலேயே தன் வாழ்க்கை இலட்சியத்தை தெளிவாக நிர்ணயித்துக் கொண்டு, அந்த இலட்சியத்தை அடைவதற்காக தனது சக்திகளை பிரயோகிக்கும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளும் ஒருவர், தனது சகாக்களை எல்லாம் முந்திக் கொண்டு வாழ்க்கையில் வெற்றிகாண்கிறார். நுண்ணியமான அவதானத் தோடு, இலட்சியத்தில் நிலைகொண்டு ஊன்றி உழைத்தால் மேதாவிலாசம் தானாகவே ஏற்படுகிறது. விழிப்புடனும் ஊக்கத்துடனும் உறுதியாகச் செயல்படும் போது ஒருவர் அதிமேதையாகிறார்'' என்று புல்வர் என்ற ஞானி கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*An aim in life is the only fortune worth finding; and it is not to be found in foreign areas, but in yours.*

*—Robert Louis Stevenson*

''இலட்சியம் ஒன்றுதான் வாழ்க்கையில் ஒருவர் தேடவேண்டிய ஐஸ்வரியம் ஆகும். அதை வெளிப்பிரதேசத்தில் அல்ல, இருக்கும் இடத்திலேயே தேடிக்கொள்ள வேண்டும்'' என்று கூறியுள்ளார் பிரபல ஆங்கில எழுத்தாளர் ஆர்.எல். ஸ்டீவன்ஸன்.

மேற்கூறிய இருவருடைய மேற்கோள்களுக்கும் அமைய தொண்டமான் சிறுவயதிலேயே, தாம் வசித்த சூழலிலேயே, தமது வாழ்க்கையின் இலட்சியத்தை நிர்ணயித்துக் கொண்டார். அதாவது தோட்டத் தொழிலாளர்களின் நல்வாழ்வுக்காகத் தம் வாழ்நாள் முழுவதும் பாடுபடுவது என்பது தான் அவர் வரித்துக்கொண்ட குறிக்கோள்.

பாலப்பருவத்தில் தாம் கொண்ட இலட்சியத்தில் அவர் இன்று வரை உறுதியுடன் நிலைத்து நின்றமையினால் புல்வரின் கூற்றுப்படி அவர் இன்று தொழிற்சங்க விவகாரங்களில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒரு பெரும் மேதையாகப் பரிணமித்திருக்கிறார்.

திரு. தொண்டமானுடைய பிறந்த தினம் 1913 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30 ஆம் திகதி ஆகும். சிறுவயதிலேயே தமது வாழ்க்கை இலட்சியம் என்ன என்று அவர் தீர்மானித்துக் கொண்ட போதிலும், அவருடைய இலட்சியம் விகசித்து ஓங்கி வளர்வதற்கு அவர் தமது 26 ஆவது வயது வரை பொறுத்திருக்க வேண்டியதாயிற்று. அவருக்கு 26 ஆவது வயது நடந்து கொண்டிருக்கும் போது தான் ஆசிய ஜோதி என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கப்பட்ட பண்டித ஜவாஹர்லால் நேருவை இலங்கைக்கு அனுப்பிவைத்தார் மகாத்மா காந்தி.

## இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தோற்றம்

இலங்கைவாழ் இந்தியர்கள் அப்போது பல கூறுகளாகப் பிரிந்து கிடந்தார்கள். பல்வேறு கட்சிகளும், இயக்கங்களும், சங்கங்களும், சபைகளும் அவர்களைப் பிளவுபடுத்தி வைத்திருந்தன. இந்த நிலையில் அரசாங்கம் அவர்களுக்குப் பலவிதமான இன்னல்களை விளைவித்து வந்தது. செய்து வந்த வேலைகளிலிருந்து அவர்களை விலக்கவும் நாடு கடத்தவும் ஆட்சியாளர்கள் திட்டங்கள் தீட்டினார்கள். அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி, இலங்கைவாழ் இந்திய மக்களுக்கு விமோசனம் ஏற்படுத்திக் கொடுக்கவே பண்டித ஜவாஹர்லால் நேரு இலங்கை வந்தார்.

இந்தியர்கள் ஒற்றுமையின்றிப் பிளவுண்டு கிடப்பதைப் பார்த்து நேருஜீ வேதனைப்பட்டார். அவர்களை ஓர் அணியின் கீழ் திரட்டினால் தான் அவர்களுக்கு நல்வாழ்வு உண்டு என்பதை உணர்ந்தார் அவர். எவ்வளவோ முயன்றார். எனினும் இலேசில் வெற்றி கிடைக்கவில்லை. அவர் நம்பிக்கை இழந்து நாடு திரும்பப் போகும் சமயத்தில் ஒரு ஒளி உதயமாயிற்று. பிளவுண்டு கிடந்த அமைப்புகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஓர் அமைப்பாகப் பரிணமிப்பதற்கு இசைவு தெரிவிக்கப்பட்டது.

இதன் பயனாக இலங்கை-இந்திய காங்கிரஸ் என்ற பெயரில் ஒரு ஸ்தாபனத்தை 1939 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25 ஆம் திகதி தோற்றி வைத்தார் பண்டித ஜவாஹர்லால் நேரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஸ்தாபனத்தின் முதலாவது மாநாடு 1940 ஆ. ஆண்டு செப்டம்பர் மாதம் 8 ஆம் திகதி கம்பளையில் நடைபெற்றது. அந்த மாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவராக விளங்கியவர் திரு. தொண்டமான் தான். அன்று அவர் நிகழ்த்திய வரவேற்பு சொற்பொழிவு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.


அன்று முதல் தொண்டமான் தாம் இளவயதில் செய்து கொண்ட வைராக்கியத்தின்படி தமது இலட்சியப் பாதையில் பயணம் மேற்கொண்டார். இலங்கைவாழ் இந்தியர்களுக்காக குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களுக்காக பாடுபட்டு உழைப்பது என்ற அவரது இலட்சியப் பயணம் இன்று 50 ஆண்டுகளாகியும் தொடர்ந்து நடக்கிறது. இடைப்பட்ட காலத்தில் எத்தனையோ இன்னல்களையும் இடைஞ்சல்களையும் சந்தித்த அவருடைய இலட்சியப் பயணம் இப்போது எழுச்சியுடனும் ஏற்றத்துடனும் வெற்றிநடைபோட்டு நடந்து கொண்டிருக்கிறது.

இலங்கை-இந்திய காங்கிரஸ் என்று ஆரம்பிக்கப்பட்ட அந்த ஸ்தாபனம் சுமார் 10 வருடங்களுக்குப் பின்னர், காலதேச வர்த்தமானங்களை அனுசரித்து தனது பெயரை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்று மாற்றிக் கொண்டது. ஐம்பது ஆண்டு காலமாக திரு. தொண்டமான் இந்த தொழிற்சங்க அமைப்பில் தம்மைப் பிணைத்துக் கொண்டிருக்கிறார். இதில் நாற்பது ஆண்டுக் காலம் அவர் அவ்வமைப்பின் தலைவராக விளங்கிவருகிறார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற அமைப்பின் சக்தியில் திரு. தொண்டமானுக்கு அளவிடமுடியாத நம்பிக்கை உண்டு. சமீபத்தில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்விழா பொதுக் கூட்டத்தில் ஜனாதிபதி பிரேமதாசா உணர்ச்சியோடு பேசுகிறார்.



"நம் முன்னோர்கள் இலங்கைக்கு வந்த போதே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் போன்ற ஓர் அமைப்பைத் தோற்றுவித்திருந்தால், நமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் கொடுமைகளையும் எதிர்த்துப் போராடி எப்போதோ வெற்றியை நிலைநாட்டியிருக்கலாம்"

என்று கூறியிருக்கிறார். இதன் பொருள் என்ன?

இன்று நாம் வெற்றிகளை நிலைநாட்டியிருக்கிறோம். அதுவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற ஸ்தாபனத்தின் மூலமாகஎன்பது தானே பொருள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விழாக்களையும், கருத்தரங்குகளையும் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பது தலைவர் தொண்டமானுக்கு அடிக்கடி ஏற்படும் அன்புக் கடமையாகும்.

## நேசிப்பவர்:
## நேசிக்கப்படுபவர்

ஓர் அரசியல் வாதியின் வெற்றி, தாம் சார்ந்து நிற்கும் மக்களிடம் அவர் எத்தகைய பற்றும் பாசமும் வைத்திருக்கிறார் என்பதிலும், அந்த மக்கள் அவரிடம் எத்தகைய அன்பும் பக்தியும் வைத்திருக்கிறார்கள் என்பதிலுமே தங்கியிருக்கிறது.

தலைவர் தொண்டமானைப் பொறுத்த வரையில் தோட்டத்தொழிலாளர்களை அவர் தமது சொந்தப் பிள்ளைகளுக்கும் மேலாகவே நேசிக்கிறார். இந்த மனோநிலை அவருக்கு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. ஆரம்ப காலத்திலேயே ஏற்பட்டு விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது வாழ்க்கையில் பிரவேசித்த காலத்திலேயே அவர் காட்டிய பரோபகார சிந்தனைகளும் செயல்களும் அவருடைய உள்ளத்தில் நிறைந்துள்ள அன்புக்கும் கருணைக்கும் எடுத்துக்காட்டுகளாக அமைந்தன.

இந்த சம்பவம் 1945–46 ஆம் ஆண்டுகளில் நடைபெற்றது. தாமாகக் காடு வெட்டி, நிலம் திருத்தி, மரக்கறித்தோட்டம் போட்டு வாழ்ந்த, உருளை வள்ளித் தோட்டத்து சுமார் 360 தோட்டத் தொழிலாளர் குடும்பங்களை அன்றிருந்த ஆட்சியாளர் பலவந்தமாக வெளியேற்ற முயன்றனர். அந்த நிலத்தை வேற்றின மக்களுக்குப் பகிர்ந்தளித்து அவர்களை அங்கு குடியமர்த்த திட்டமிட்டனர். இந்த செயல் அநியாயமானது என்பதை உணர்ந்தார் தலைவர் தொண்டமான்.

இலங்கையில் தொடர்ந்து ஐந்து வருடங்கள் வாழ்ந்து ஒரே இடத்தில் குடியமர்ந்திருப்பவர்களுக்கு எல்லா உரிமைகளும் உண்டு. அவர்களை நினைத்தபடி வெளியேற்ற முடியாது. அந்தக் காணியை அங்கு வாழ்ந்து வருபவர்களுக்கே பிரித்துக் கொடுக்கவேண்டும் என்று கூறினார் தொண்டமான்.

ஆட்சியாளர்கள் விடவில்லை. காணியை விட்டு வெளியேற மறுத்த தொழிலாளர் மீது கிரிமினல் குற்றச்சாட்டு சுமத்தி வழக்குத் தொடர்ந்தனர். 363 பேர் கேகாலைக் கோர்ட்டில் விசேஷமாக விசாரிக்கப்பட்டனர். அவர்களை விசாரித்த நீதிவான் அவர்களைக் கிரிமினல் குற்றவாளிகளாகத்தீர்மானித்து ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 1000 தண்டமும் 3 மாதச் சிறையும் விதித்தார்.

தொழிலாளர்கள் கலங்கவில்லை. காங்கிரஸ் இருக்கிறது; தலைவர் தொண்டமான் இருக்கிறார். அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மைக் காப்பாற்றுவார் என்று துணிவுடன் இருந்தார்கள்.

காங்கிரஸ் ஆரம்பித்து ஐந்து ஆறு ஆண்டுகள் தான் ஆகியிருந்த நேரம். அப்போது காங்கிரஸின் நிதிநிலைமை மோசமாக இருந்தது. தொழிலாளர்களைப் பிணை எடுப்பதானால் சுமார் 4 லட்சம் ரூபா தேவைப்பட்டது. நாலு லட்சம் என்றால் இப்போதைய 40 லட்சத்துக்குச் சமம் அல்லவா? பணத்துக்கு எங்கே போவது?

திரு. தொண்டமானிடமும், 4 லட்ச ரூபா அப்போது பணமாக கையில் இருக்கவில்லை. ஆயினும் அவர் கலங்கவில்லை. உடனடியாக அவர் தமது சொந்த தேயிலை தோட்டத்தை அடமானம் வைத்து வட்டிக்குப் பணம் புரட்டி கோர்ட்டில் பிணைகட்டி, அவ்வளவு தொழிலாளர்களையும் அரசாங்கம் உடனடியாக சிறைச்சாலைக்குள் தள்ளிவிடாமல், விடுதலை செய்தார்.

இந்தத் தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்டது அநீதி என்பதை உலகிற்கு அறிவுறுத்துவதற்காக திரு. தொண்டமான் தேயிலைத் தோட்டங்களில் ஒரு பாரிய வேலைநிறுத்தத்தை ஏற்பாடு செய்தார். காங்கிரஸ் மேற்கொண்ட முதலாவது பெரிய போராட்டம் இதுவே ஆகும். உருளை வள்ளித் தோட்டத் தொழிலாளருக்கு ஆதரவாக சுமார் ஒரு இலட்சத்து இருபத்தோராயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை அரசாங்கம் நடுங்கிப் போயிற்று.

அப்போது இந்திய அரசின் பிரதிநிதியாக இங்கு எம்.எஸ். அனே என்பவர் இருந்தார். பிரச்சினையைத் தீர்த்து வையுங்கள் என்று அவர் காலில் போய் விழுந்தார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 1. அமைச்சர் தொண்டமான், திரு. வி. இராதாகிருஷ்ணன், மத்திய மாகாண கல்வி அமைச்சின் இணைப்பதிகாரி திரு. எஸ். இராதாகிருஷ்ணன் ஆகியோர் காணப்படுகின்றனர்.



படம் 2. கடந்த பெப்ரவரி மாதத்தில் முதன் முறையாக கோட்லொஜ் தோட்டத்தில் மின்சார இணைப்பு வழங்கப்பட்டபோது அமைச்சர் தொண்டமான் வரவேற்கப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாய அமைச்சராக விளங்கிய டி.எஸ். சேனநாயகா. இருவரும் பிரிட்டிஷ் கவர்ணராக கொழும்பில் இருந்த சேர் ஹென்றி மூர் என்பவரின் உதவியை நாடினார்கள். கவர்ணர் ஒரு விசேஷ அறிவித்தல் மூலம் குற்றம் சாட்டப்பட்ட 363 தொழிலாளர்களுக்கும் பொது மன்னிப்பு வழங்கி கோர்ட்டிலிருந்த வழக்கை நீக்கினார்.

இந்த சந்தர்ப்பத்தில்தான் திரு. தொண்டமான் தமது மதியூகத்தையும், தீரத்தையும், தலைமைத்துவத்தின் சாமர்த்தியத்தையும், செயலுருக் கொடுத்து, முதன்முறையாக நிலைநாட்டினார்.

வழக்கில் சிக்கியிருந்த 363 பேரில் 362 பேரைப் பொது மன்னிப்பை ஏற்கும்படி செய்தார். ஒருவரை மன்னிப்பை ஏற்கவேண்டாம் என்று தடுத்து விட்டார். மன்னிப்பை ஏற்க மறுத்தவரின் பெயர் செல்வநாயகம். இப்படி திரு. தொண்டமான் செய்ததற்கு காரணம் இருந்தது. அத்துமீறல் என்ற கிரிமினல் குற்றச்சாட்டு சட்டரீதியாகச் செல்லுபடியாகுமா என்பதை உயர் நீதிமன்றங்களில் பரீட்சித்துப் பார்க்க அவர் விரும்பினார்.

செல்வநாயகத்தின் மீது விதிக்கப்பட்ட தீர்ப்பை ஆட்சேபித்து பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அதி உயர் நீதிமன்றமான பிரிவிக் கவுன்ஸிலுக்கு மேன் முறையீடு செய்வித்தார் தொண்டமான். அதற்கான செலவுகளையும் அவரே ஏற்றுக்கொண்டார்.

பிரிட்டிஷ் பிரிவிக் கவுன்ஸில் செல்வநாயகத்தின் மீது விதிக்கப்பட்ட தீர்ப்பை தள்ளுபடி செய்தது. பல வருடங்களாக ஓர் இடத்தில் குடியமர்ந்திருந்தவர் மீது கிறிமினல் அத்துமீறல் குற்றச்சாட்டைச் சுமத்த முடியாது என்றும் பிரிவிக் கவுன்ஸில் தீர்ப்பு வழங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சம்பவத்தினால் இரண்டு விஷயங்கள் தெளிவாகின. ஒன்று, ஏழைத் தொழிலாளர்கள் மீது தொண்டமான் எத்தகைய அன்பும் பரிவும் கொண்டிருந்தார் என்பது அன்றே உலகிற்கு துலாம்பரமாகத் தெரிய வந்தது. இன்னொன்று, எடுத்த கருமத்தை இறுதிவரை போராடி, அதுவும் தமது சொந்தப் பணத்தைச் செலவிட்டேனும் போராடி, தொழிலாளர்களுக்கு விமோசனம் தேடிக் கொடுக்க தொண்டமான் தயங்கமாட்டார் என்பதும் நிரூபணமாயிற்று.

இன்று ஒரு பெரும் வெற்றி வீரராகத் திகழும் தொண்டமான் அன்றே அரசாங்கத்தை எதிர்த்துப் போராடி, தொழிலாளர்களுக்கு மாபெரும் வெற்றியைத் தேடிக் கொடுத்து, அந்த வெற்றியில் அவரும் திளைக்கலானார்.

இப்படியான சம்பவங்கள் பின்னர் அவர் வாழ்நாளில் பல நேர்ந்தன. அதனால் தான் தலைவர் தொண்டமானை தமக்கு வழிகாட்டும் தெய்வமாக இன்று தோட்டத் தொழிலாளர்கள் மதிக்கிறார்கள். அவர் கோயில்களுக்குச் சென்றால் தெய்வத்துக்குக் காட்டிய கர்ப்பூர ஆராத்தியைப் பின்னர் தொண்டமானுக்கும் காட்டி அவரையும் வணங்கி, கால்களில் விழுந்து கும்பிடுகின்றனர் தோட்டத் தொழிலாளர்களான ஆண்களும், பெண்களும், வாலிபர்களும்! அதேபோல அவரும் அவர்கள் மீது ஆராத அன்பைச் சொரிகின்றார். இப்படி ஒரு தலைவர் எங்களுக்கு எப்படிக் கிடைப்பார்? 'வ்ராது வந்த மாமணி' அல்லவா எங்கள் தலைவர் என்று இந்திய வம்சாவளி மக்கள் கண்பனித்து இறும்பூதெய்துகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளருக்காக ஓர் அற நிதியம்

தலைவர் தொண்டமான் தோட்டத் தொழிலாளர்களை நேசிக்கிறார். அவர்களிடம் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கிறார். அதுபோலவே, தொழிலாளர்களும் அவரை நேசிக்கிறார்கள். அவர் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இந்த பரஸ்பர நல்லெண்ணம் தான் இ.தொ.காவும், தொண்டமானும் அடைந்துவரும் வெற்றிகளுக்கு பின்னணியாக உள்ள பலம் என்றும் கொள்ளலாம்.

தொண்டமான் தொழிலாளர்களை எவ்வண்ணம் நேசிக்கிறார் என்பதற்கு மற்றுமோர் உதாரணத்தை இங்கு காட்டலாம்.

நாட்டில் எத்தனையோ தொழிற்சங்கங்கள் உள்ளன. எனினும் மிகப்பெரிய தொழிற்சங்கம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்தான். இ.தொ.கா. இலங்கையில் மட்டுமல்லாமல் கிழக்கு ஆசியாவிலேயே ஒரு பெரிய தொழிற்சங்கமாகும். இந்த அளவிற்கு இந்த தொழிற்சங்கத்தைக் கட்டியெழுப்பிய பெருமையும் சாதனையும் நியாயப்படி திரு. தொண்டமானைச் சாரவேண்டியவையே.

நாட்டில் பல தொழிற் சங்கங்கள் இருந்தும், அவற்றில் எதுவும் தொழிலாளிகளின் நலனில் தூரப்பார்வை கொள்ளவில்லை. அன்றாடப் பிரச்சினைகளையும், தொழிற்றகராறுகளையும் தீர்ப்பதிலேயே அவை நாட்டங் கொண்டு உழைத்து வருகின்றன.

ஆனால் தொண்டமான் இ.தொ.கா.வை அப்படி நடத்த வில்லை. தொழிலாளர்களின் எதிர்கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமைச்சரின் 77 ஆவது பிறந்ததின விழாவின் போது. மத்தியில் அமைச்சரும், அவர் மூத்தபேரப்பிள்ளை அனுராதாவும், பேரப் பிள்ளையின் பிள்ளையும் காணப்படுகின்றனர்.

நலத்தையும் கருத்தில் கொண்டே நடத்திவருகிறார். தொழிலாளர்களும் அவர்தம் வழிந்தோன்றல்களும், இலங்கையில் வாழும் ஏனைய சமூகத்தினருக்கு எந்த வகையிலும் பின்தங்கியவர்களாகப் போய்விடக்கூடாது என்பதில் அக்கறை கொண்டிருக்கிறார் தொண்டமான்.

கல்வியில், வர்த்தகத்தில், விஞ்ஞானத்தில், ஆராய்ச்சியில், சுகாதாரத்தில், தொழில் துறைகளில் எல்லாம் மலையகத்தின் மைந்தர்கள் முன்னேற வேண்டும் என்பதற்காக அவர் ''தொண்டமான் பவுண்டேசன்'' என்ற பெயரில் ஒரு அற நிதியத்தை அமைத்திருக்கிறார். இப்படியான ஒரு காரியத்தை வேறு எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சங்கமும் எண்ணிப்பார்த்தது கூடக் கிடையாது. தொண்டமான் இந்த அற நிதியத்தை தமது 75 ஆவது வயதில் ஆரம்பித்து வைத்தார்.

இந்த ''தொண்டமான் அறநிதியம்'' எதற்காக?

இந்த அறநிதியம் செயல்படுவதற்கும் பணிபுரிவதற்கும் ஏழு கட்டளைகளைத் திரு. தொண்டமானே வகுத்துக் கொடுத்திருக்கிறார்.

தொண்டமான் அறநிதியம் பின்வரும் காரியங்களை நிறைவேற்றவுள்ளது:

1. பல இன மக்களைக் கொண்ட இலங்கை மக்களின் ஆத்மார்த்த உணர்வுகளை போற்றி வளர்த்து இலங்கையில் வாழும் வித்தியாசமான சமூகங்களிடையே சமத்துவத்தையும் மரியாதையையும் உருவாக்குதல்.

2. உணவு, உடை, இருப்பிடம், கல்வி, மனித கலாச்சார, வளர்ச்சி ஆகியவை தொடர்பாக சமூகங்களிடையேயும் மக்களிடையேயும் காணப்படும் சமத்துவமின்மையை அகற்றி, சமூக நீதியை உறுதிப்படுத்தி, வசதிகள் இன்றி அவதிப்படும் மக்களின் முன்னேற்றத்துக்காக பாடுபடுதல்.

3. கல்வி வசதியை விருத்தி செய்யும் முகமாகவும், அறிவு வளர்ச்சியை ஏற்படுத்தும் முகமாகவும், பாடசாலைகளை, வாசிகசாலைகளை, கலாசார நிலையங்களை மற்றும் ஆராய்ச்சிக் கூடங்களை நிறுவி, அவற்றைப் பேணும் வகையில் அவற்றிற்கு நிதி உதவி, நன்கொடை வழங்கல், புலமைப் பரிசில்கள், கல்லூரி நிதிகள் ஆகியவற்றை ஏற்படுத்துதல், எல்லா விதமான உயர் கல்வி ஸ்தாபனங்களுக்கும் நிதி உதவி வழங்கல், முயற்சியுடைய பொருத்தமான நபர்களுக்கு வர்த்தக, தொழில் துறைகளிலும், நிபுணத்துவம் கொண்ட தொழில்களிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பம் அளித்தல், தடைப்பட்டவர்களின் திறமைகளை வளப்படுத்தும் வகையில் பயிற்சி நிலையங்களை அமைத்தல்.

4. வறுமை, மற்றும் துன்பங்களை நிவர்த்தி செய்யும் வகையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு நிதி உதவி, மற்றும் ஏனைய பொருளாதார உதவிகள் வழங்கல், வறுமையாலும் விபத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளவருக்கு உதவும் வகையில் அனாதை இல்லங்கள், திக்கற்றவர்களுக்கான இல்லங்கள், ஏழைகளுக்கு உதவி செய்யும் அமைப்புகள், புனர்வாழ்வு நிலையங்கள் ஆகியவற்றை அமைத்து நடத்தல்.

5. எல்லாவிதமான நோய்களையும் தடுத்து நிவாரணம் அளிக்கும் முயற்சிகளுக்கு பொருளாதார உதவி அளித்து உதவி செய்தல், நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும், உடல், மன ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும், உடல் ஊனம் கொண்ட வர்களுக்காகவும் இயங்கும் ஆஸ்பத்திரிகள், மருத்துவ விடுதிகள் ஆகியவற்றை அமைத்து நடத்துதல்.

6. சிறுவர் சிறுமியரின் சுகாதாரத்தைப் பேணும் வகையில் உணவு, உடை, மருத்துவ மற்றும் சத்திர சிகிச்சை வசதிகளை ஏற்படுத்துதல். போஷாக்கின்மை, விபத்து மற்றும் நோய்களால் பீடிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கான சிகிச்சை நிலையங்களை அமைத்து பாதிக்கப்பட்டவர்களை முறையாகப் பராமரித்தல்.

7. இலங்கை வாழ் மக்களின் கற்பனை வளத்தை அதிகரிக்கும் வகையில் கலை, கலாசார மற்றும் இலக்கியத் துறை முயற்சிகளுக்கு ஊக்கம் அளித்து வளர்த்தல்.

மேற்கூறிய உன்னதமான இலட்சியங்களை வைத்து 'தொண்டமான் அற நிதியம்' திட்டங்கள் வகுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


செயல்பட்டு வருகிறது. இந்த அறநிதியத்துக்கு பத்து லட்சம் ரூபாவை முன் முதலாக ஒதுக்கினார் திரு. தொண்டமான். ஜனாதிபதி பிரேமதாசா ஒரு லட்சம் ரூபாவைக் கொடுத்து உதவினார். இந்த அறநிதியத்துக்கு ஒவ்வொரு தோட்டத் தொழிலாளியும் தனது ஒருநாள் சம்பளத்தை அன்பளிப்புச் செய்து இந்நிதியை மேலும் மேலும் சுரக்க வைக்க வேண்டும் என்பது தொண்டமானின் வேண்டுகோளாகும்.

திரு. தொண்டமான் உலகம் என்ற பல்கலைக் கழகத்தில் அனுபவம் என்ற பாடங்களைப் படித்துத் தேறிய ஓர் அரசியல் பட்டதாரி. இவருக்கு முன்னால் பலர் இந்த நாட்டில் அரசியல் நடத்தியிருக்கிறார்கள். தமிழ் அரசியல் வாதிகளைக் குறிப்பிடுவதானால், சேர்

மலையக வாலிபர்களுக்கான பொலிஸ் பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று சமீபத்தில் நுவரெலியாவில் நடைபெற்ற போது அமைச்சர் தொண்டமான் விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். இடது புறத்தில் திரு. வி. இராதாகிருஷ்ணன், வலது புறத்தில் நுவரேலியா அரசாங்க அதிபர் ஆகியோர் காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தலைவர் தொண்டமான் நூல் வெளியீட்டு விழாவில் அமைச்சருக்கு திரு. எம்.எஸ். செல்லச்சாமி மாலை அணிவிக்கிறார். பக்கத்தில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் காணப்படுகிறார்.

பொன்னம்பலம் இராமநாதன், சேர் பொன்னம்பலம் அருணாசலம், சேர் மகாதேவா, எஸ். நடேசன், ஜீ.ஜீ. பொன்னம்பலம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம், அ. அமிர்தலிங்கம் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

சிங்கள அரசியல் வாதிகளைக் குறிப்பிடுவதானால் ஏ.ஈ. குணசிங்க, பிலிப் குணவர்த்தனா, டபிள்யு. தஹநாயகா, டாக்டர் என்.எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். த சில்வா, பீட்டர் கெனமன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

மேற்கூறப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், நியாயவாதிகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத் தரணிகள், அட்வகேட்டுகள், பாரிஸ்டர்கள், கே.ஸி.க்கள், க்யூ.ஸி.க்கள், வாய்சாகலமாக ஆங்கிலத்திலும், தமிழிலும், சிங்களத்திலும் பேசவல்லவர்கள். உரத்துப் பேசி சட்டசபையையும் பாராளுமன்றத்தையும் அதிர வைத்தவர்கள்.

ஆயினும் மேற்கூறிய எவரும் அடையாத அளவு சாதனைகளையும், மிகப்பெரிய வெற்றிகளையும் நிலைநாட்டியிருப்பவர் திரு. தொண்டமான் தான் என்று கூறினால் அது மிகையாகாது.

திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலமும், திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் பட்டதாரிகள், சட்டநிபுணர்கள் தாம். பல்லாண்டு காலமாக அவர்கள் யாழ்ப்பாணத்து மக்களின் பிரதிநிதிகளாக விளங்கியவர்கள். யாழ்ப்பாணத்து மக்களும் சாதாரணமானவர்கள் அல்லர். அவர்களும் பெரும்பாலும் படித்தவர்கள். அறிவாளிகள். பணப்பலம் கொண்டவர்கள். மலைநாட்டு தொழிலாளர்களைப் போல அவர்கள் படிப்பில் குறைந்தவர்கள் அல்லர். பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் அல்லர்.

அப்படிப் படித்த, பண பலம் கொண்ட யாழ்ப்பாணத்து மக்களின் பிரதிநிதிகளாக விருந்தும் பொன்னம்பலமும் செல்வநாயகமும் சாதித்தது என்ன? இந்த இருவரும் தமக்கு இசைவான நோக்கங்களோடு அரசியல் கட்சிகளை அமைத்தார்கள். தமிழ் காங்கிரஸ் என்றும், தமிழ் அரசுக் கட்சி என்றும் கொடியுயர்த்தி நின்றார்கள். பலபல போராட்டங்களை நடத்தினார்கள். ஆனால் தமது வாழ்நாளில் சாதனை படைத்தார்களா? தமது கண் மூடுமுன்னே வெற்றிகளைக் கண்டார்களா?

ஐம்பதுக்கு ஐம்பது கேட்டுப் போராடியவர் பொன்னம்பலம். சமஷ்டி ஆட்சி கேட்டுப் போராடியவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வநாயகம். இந்த இரண்டு கோரிக்கைகளுமே அவர்கள் கண் முன்னால் கிடைக்க வில்லை.

திரு. தொண்டமான் தமது வாழ்நாளிலேயே தமது கோரிக்கைகளை வென்றுவிட்ட வீரர்.

இலங்கையில் வாழும் ஏனைய மக்களோடு சரிநிகர் சமானமான அந்தஸ்து இந்திய வம்சாவளி மக்களுக்கு கிடைக்கவேண்டும், வாக்குரிமையும், பிரஜா உரிமையும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று போராடியவர் தொண்டமான். அவர் கோரிக்கைகள் அவர் வாழ்நாளிலேயே நிறைவேறுவதைக் கண்டுவிட்ட பாக்கியசாலி அவர். இந்தப் பேறு சிங்களத் தலைவர்களுக்கும் கூடக் கிடைக்கவில்லை.

டாக்டர் என்.எம். பெரேராவும், டாக்டர் கொல்வின் ஆர். த சில்வாவும், பீட்டர் கெனமனும் அரசியல் துறையில் பெரிய சாமர்த்திய சாலிகளாகவே விளங்கினார்கள். இந்த நாட்டில் ஒரு சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்றும், ஒரு சோஷலிஸ ஆட்சியை அமைக்க வேண்டும் என்றும் கனவு கண்டார்கள் பெரேராவும் கொல்வினும். அது நடந்ததா? அவர்களுடைய பகல் கனவுகள் நிறைவேறினவா? அவர்களுடைய அரசியல் அபிலாஷைகள் பூர்த்தியாயினவா? இல்லை.

இந்த நாட்டில் ஒரு கம்யூனிஸ சமுதாயத்தையும், கம்யூனிஸ வாத ஆட்சியையும் நன்கு நிறுவிவிட படாதபாடுபட்டார்கள் பீட்டர் கெனமனும், டாக்டர் எஸ்.ஏ. விக்ரமசிங்காவும். அவர்கள் எண்ணம் நிறைவேறவே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. தொண்டமானுடைய போராட்டங்கள் வெற்றி தந்துவிட்டன. அவர் அரசியல் அபிலாஷைகள் நிறைவேறிக்கொண்டே வருகின்றன. இந்த வகையில் அவர் முன்பிருந்த தமிழ் அரசியல் தலைவர்களையும் சிங்கள அரசியல் தலைவர்களையும் தோற்கடித்து விட்ட ஓர் அரசியல் தலைவராக, வெற்றி வீரராக விளங்குகிறார் என்றால் அது அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதே அல்லவா?

இலங்கையில் குடியேறிய இந்தியர்கள், குறிப்பாக மலைநாட்டுத் தோட்டத் தொழிலாள மக்கள், பிரிட்டிஷார் இந்நாட்டை ஆட்சி செய்தபோது பிரஜா உரிமை, வாக்குரிமை எல்லாம் உடைய மக்களாக மதிக்கப்பட்டார்கள். ஆனால் 1947 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம், 1948 ஆம் ஆண்டில் நிறைவேற்றிய இரு சட்டங்களின் மூலம் இந்திய வம்சாவளி மக்களின் வாக்குரிமையையும் பிரஜா உரிமையையும் பறித்தது. இந்த அநியாயத்தை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தினார் திரு. தொண்டமான். இழந்த உரிமைகளைப் பெறுவதற்காக தாம் தலைமை தாங்கி நின்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற ஸ்தாபனத்தை முன் நிறுத்திப் பல போராட்டங்களை நடத்தினார்.

நாற்பது ஆண்டுக் காலம் இந்தப் போராட்டம் நடைபெற்றது. திரு. தொண்டமான் சளைத்தாரில்லை. மதியூகமும் சாணக்கியமும் கொண்ட தொண்டமான் இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு ஒரு புதிய அணுகுமுறையைக் கையாண்டார். 1977 இல் ஆட்சிக்கு வந்த அதே ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கத்தில் ஓர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கமானார். திரு. ஜே.ஆர். ஜயவர்த்தனாவின் அமைச்சரவையில் ஓர் அமைச்சராகி, அந்தப் பதவியில் இருந்து கொண்டே தமது உரிமைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினார்.

தாம் அங்கம் வகிக்கும் அரசையே, ஒரு தொழிற் சங்கத் தலைவராக நின்று எதிர்த்துப் போராடிய புதுமையை உலகிற்குக் காட்டினார் திரு. தொண்டமான். ஜயவர்த்தனா பதவி துறந்து அவருடைய இடத்தில் திரு. ஆர். பிரேமதாசா ஜனாதிபதியாக வந்தபின்னரும் திரு. தொண்டமானுக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. பிரமேதாசாவின் அமைச்சரவையில் அங்கம் வகித்துக்கொண்டும், தொண்டமான் இந்திய வம்சாவளி மக்களின் உரிமைக் கோரிக்கையைத் `தொடர்ந்து வலியுறுத்தி வரலானார்.



அமைச்சர் தமது பேரப் பிள்ளைகள் பெற்ற செல்வங்களுடன் கொஞ்சிக் குலாவுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பெறுபேறாக, ''நாடற்றவர்களுக்குப் பிரஜா உரிமை வழங்கும் விசேஷ சட்டம்'' என்ற சட்டமூலம் 1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டமூலம் நவம்பர் 11 ஆம் திகதி சபாநாயகரின் அங்கீகாரம் பெற்று சட்டமாகியது.

இந்த சட்டத்தின் மூலம் இலங்கை வாழ் இந்திய மக்கள் 1948 ஆம் ஆண்டு இழந்த உரிமைகளை மீண்டும் பெற்றார்கள். இது தொண்டமான் நிலைநாட்டிய ஒரு பெரிய சாதனையாகும். அவருக்குக் கிடைத்த ஒரு மகத்தான வெற்றியாகும்.

இதில் வேடிக்கை என்னவென்றால், எந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் நாற்பது வருடங்களுக்கு முன்னால் இந்திய வம்சாவளியினரின் பிரஜா உரிமை வாக்குரிமைகளைப் பறித்ததோ, அதே ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தைக் கொண்டே பறிக்கப்பட்ட உரிமைகளை மீண்டும் வழங்கும் படி செய்துவிட்டார் திரு. தொண்டமான். இது இரட்டிப்பு மடங்கான வெற்றியே அல்லவா?

தலைவர் தொண்டமானையும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸையும் ஆதரித்து நிற்கக் கூடிய இந்திய வம்சாவளியினரின் எண்ணிக்கை இந்த நாட்டில் மிகக் குறைவானதாகவே உள்ளது. அவர்களிடம் உள்ள வாக்கு பலமும் சொற்பமானதே.

இந்த குறைந்த வாக்குப் பலத்தை வைத்துக் கொண்டு இந்த நாட்டின் அரசியலில் ஓர் அழுத்தமான செல்வாக்கையும் கணிசமானளவு தாக்கத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்திவருகின்றார் தொண்டமான். இது அவருடைய சாமர்த்தியத்துக்கும் அரசியல் பேராபேரத்துக்கும் சான்று பகர்கின்றது.

இந்த நாட்டில் எத்தனையோ அரசியல் கட்சிகள் இருந்த போதிலும், நாட்டை மாறி மாறி ஆளக்கூடிய தகைமையும், பலமும், செல்வாக்கும் உடைய அரசியல் கட்சிகள் இரண்டு தான். ஒன்று, ஐக்கிய தேசிய கட்சி. மற்றொன்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி. இந்தக் கட்சிகளுள் ஒன்றுதான் அரசாங்கத்தை அமைக்க முடியும்.

மேற்கூறிய இரண்டு கட்சிகளில் எந்த ஒரு கட்சியும் இ.தொ. கா. வின் ஆதரவு இல்லாமல் அரசாங்கத்தை அமைக்க முடியாது என்ற ஒரு நிலையை உருவாக்கியிருக்கிறார் திரு. தொண்டமான். இ.தொ.கா. வை வெளியே விட்டு விட்டு ஆட்சியை சுமுகமாக நடத்த முடியாது. தொண்டமானுடைய அரசியல் விவேகத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்த நிலை தொண்டமானுக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் கிடைத்திருக்கும் மற்றுமொரு வெற்றியாகும்.

வடபகுதி அரசியல் கட்சிகளும் அரசியல் இயக்கங்களும் எவ்வளவோ போராடி மாகாண ஆட்சி உரிமை, தமிழ் மொழி சம அந்தஸ்து உரிமை போன்றவைகளைச் சமீபகாலமாகப் பெற்றிருக்கின்றன என்றால், அவை போராட்டங்களால் பெற்ற பலாபலன் என்று மேலெழுந்தவாரியாகச் சொல்லிவிட முடியாது. இந்திய அரசாங்கத்தின் தலையீட்டாலும் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பேறுபேறாகவும் கிடைத்த சலுகைகளே அவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிற்கு மாறாக, மலையகத் தமிழ் மக்கள் இன்று பெற்றிருக்கும் உரிமைகள், சலுகைகள் அனைத்தும் தலைவர் தொண்டமானுடைய தனிமனித சக்தியினாலும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நடத்திய போராட்டங்களினாலும் கிடைத்தவையே ஆகும். பிரஜா உரிமை, வாக்குரிமை, பொலீஸ் துறையில் நியமனம், கிராம சேவகர் நியமனம், அரச பாடசாலைகளில் ஆசிரியர் நியமனம் போன்றவற்றை உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இப்போது ஒவ்வொரு தோட்டமும் கிராம அந்தஸ்து பெற வேண்டும் என்றும், தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடும் நிலமும் கிடைக்க வேண்டும் என்றும் தலைவர் தொண்டமான் குரல் எழுப்பி வருகிறார். இந்தக் கோரிக்கைகள் நிறைவேறும் காலமும் அதிக தூரத்தில் இல்லை.




அமைச்சர் தம்முடைய மகன் இராமநாதன், மருமகள் இராஜேஸ்வரி, பேத்தி ரேணுகா ஆகியோருடன் காணப்படுகிறார். வலது கோடியில் திரு. இராமநாதனுடைய மாமனாரும் மாமியாரும் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்க்கதரிசனமும் துணிச்சலும்

ஒரு தொழிற்சங்க தலைவருக்கு, ஓர் அரசியல் தலைவருக்கு, ஒரு மக்கள் தலைவருக்கு மிக அவசியமாக இருக்க வேண்டிய திறமைகள் மூன்று :-

1. ஒரு தொழிற்சங்க தலைவர், எதிராளிகளை தம் வசப்படுத்தி நன்கு பேரம் பேசக்கூடியவர்ாக இருக்கவேண்டும்.
2. ஓர் அரசியல் தலைவர், தீர்க்கதரிசனம் நிறைந்தவராகவும், சந்தர்ப்பம் எழும்போது அதைத் தக்கபடி நன்கு பயன்படுத்தும் மிக சாமர்த்தியம் படைத்தவராகவும் இருக்க வேண்டும்.



அமைச்சர் தமது பேரர் S A R தொண்டமானுடனும், அவர் மனைவி ராஜலட்சுமியுடனும், குழந்தை நாச்சியாருடனும் காணப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

3. ஒரு மக்கள் தலைவர், துணிச்சல் நிறைந்தவராக இருக்க வேண்டும். அதேசமயம் நிதானமும் பொறுப்புணர்ச்சியும் உடையவராக விளங்கவேண்டும்.

மேற்கூறிய சிறப்புகள் எல்லாம் ஒருங்கே படைத்தவர் தலைவர் தொண்டமான். பேரம் பேசுவதில் அவருக்கு உள்ள திறமையினால் தான் இ.தொ.கா. மேற்கொண்ட எத்தனையோ வேலைநிறுத்தங்களில் அவர் தொழிலாளர்களுக்கு சாதகமான முடிவுகளையும், சலுகைகளையும், சம்பள ஏற்றங்களையும், வாழ்க்கை வசதிகளையும் பெற்றுக் கொடுத்தார்.

சந்தர்ப்பத்தைப் ப்யன்படுத்தி காரியம் சாதிப்பதில் அவர் வல்லவர். தமது அமைச்சரவையில் சேருமாறு திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா அழைப்பு விடுத்ததும், அந்த சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுக்க முன்வந்தாரே அது திரு. தொண்டமான் தக்க சமயத்தில் செய்த தீர்க்கதரிசனமான ஒரு முடிவு ஆகும். அழைப்பை ஏற்று அவர் கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சராகப் பதவி ஏற்றிரா விட்டால், பின்னால் அவர் ஆற்றிய சாதனைகளை எல்லாம் புரிந்திருக்க முடியாது. வெற்றிகளை எல்லாம் பெற்றிருக்க முடியாது.

அமைச்சரவைக்குள்ளேயே தாமும் ஒருவராகி விட்டதனால் தான் அரசாங்கத்தின் மீது தமது செல்வாக்கை மிகவும் அபரிமிதமாகப்பிரயோகித்து அடையவேண்டியவற்றை அவரால் அடைய முடிந்தது.

திரு. ஆர். பிரேமதாசா ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. அபேட்சகராக போட்டியிட்டபோது, அவரை இதய சுத்தியுடன் ஆதரித்து, சகல தேர்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டங்களிலும் அவருக்காகப் பேசி, மலைநாட்டுத் தமிழ் மக்களின் வாக்குகளையும், இந்திய வம்சாவளியினரின் வாக்குகளையும் அவருக்கே ஒட்டு மொத்தமாகத் திரட்டிக் கொடுத்த செயல், திரு. தொண்டமானின் தீர்க்கதரிசனத்துக்கும், கிடைக்கும் சந்தர்ப்பத்தை சரியானபடி பயன்படுத்தும் அவருடைய சாமர்த்தியத்துக்கும் மற்றொரு எடுத்துக்காட்டாகும்.


அப்படி அவர் திரு. பிரேமதாசாவுக்குப் பக்கபலமாக நின்று, ஜனாதிபதியின் வெற்றிக்கு மலையகத் தமிழர் கணிசமான அளவு கைகொடுத்தார்கள் என்று நிரூபித்தமையினால் தான் இன்று திரு. தொண்டமானுக்கு ஜனாதிபதியிடம் அளவுகடந்த மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டிருக்கிறது. து மட்டுமல்லாமல், தன்னை ஆதரித்து நின்ற மலையக மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற மனப்பதிவும் ஜனாதிபதிக்கு ஏற்பட்டிருக்கிறது. மலையக மக்களின் ஆதரவு இல்லாமல் யாரும் ஜனாதிபதியாக தெரிவு பெற முடியாது என்ற உண்மையையும், மலையக மக்களின் ஏகப்பிரதிநிதியான இ.தொ.கா வின் ஆதரவு இல்லாமல் எந்த ஓர் அரசியல் கட்சியும் ஆட்சியமைக்க முடியாது என்ற உண்மையையும் தமது சாணக்கியத்தின் மூலம் யாவருக்கும் உணர்த்தி விட்டிருக்கிறார் திரு தொண்டமான்.

ஜனாதிபதி தேர்தலில் தொண்டமான் கடைப்பிடித்த தீர்க்கதரிசனமான நிலைப்பாட்டினால் தான், ஜனாதிபதி தேர்தலின் பின்னர் அமைக்கப்பட்ட அரசில் ஒரு கபினெட் மந்திரி பதவியும், இரண்டு ராஜாங்க அமைச்சர் பதவிகளும் இ.தொ.கா. வுக்கு கிடைக்கலாயின. இதுவும் திரு. தொண்டமான் சாதித்த ஒரு பெரும் வெற்றியேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. தொண்டமான் துணிச்சலும், அதே வேளையில் நிதானமும் மிக்க தலைவராக விளங்குகிறார் என்பதற்கு அவர் வாழ்வில் ஒன்றல்ல, இரண்டல்ல, எத்தனையோ உதாரணங்களை எடுத்துக் காட்டலாம். அதிக தூரம் போகாமல் கடந்த ஆண்டில் நடைபெற்ற சம்பவத்தையே ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறாக எடுத்துப் பதம் பார்க்கலாம்.

கடந்த ஆண்டு இதே கால கட்டத்தில், அதாவது 1989 ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் நாட்டில் என்ன நடந்தது? ஜே.வி.பி. காரர் என்ற ஒரு பயங்கரவாத கோஷ்டியினர் கொலை, கொள்ளை, தீவைப்பு, துப்பாக்கிச் சூடு என்ற வன் செயல்களால் நாட்டைப் பயமுறுத்தி, பொது மக்களை மிகவும் சின்னாபின்னப் படுத்திக்கொண்டிருந்தார்கள். எங்கும் அராஜகம்



திரு. வி.ரி.வி. தெய்வநாயகம் பிள்ளை அவர்களுக்கு அமைச்சர் தொண்டமான் ஒரு நூலில் கையொப்பமிட்டு வழங்குகிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவிலில் அமைச்சர் தொண்டமானுக்கும் பொதுச் செயலர் செல்லச்சாமிக்கும் பரிவட்டம் கட்டி வரவேற்கப்படும் காட்சி.

தாண்டவமாடியது. இந்தக் கொந்தளிப்பு தோட்டப் பகுதிகளிலும் ஏற்பட்டது. இங்குமங்குமாகத் தோட்டத் தலைவர்களும் தோட்டத் தொழிலாளிகளும் பயங்கரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். இதன்காரணமாக தோட்டத்து மக்கள் கதிகலங்கி நடுநடுங்கிப் போனார்கள்.

ஆனால் தலைவர் தொண்டமான் அசைந்துகொடுக்கவில்லை!

அவர் கொஞ்சங்கூடப் பயப்படாமல் தோட்டப் பகுதிகளில் சுற்றுப்பிரயாணம் செய்தார். தோட்டத் தலைவர்களையும், தோட்டத் தொழிலாளர் களையும் துணிச்சலோடு நிமிர்ந்து நிற்குமாறும், எதிர்த்துப் போராடுமாறும் போதனை செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்துரைமார் கூடத் தொழிலாளர்களை வேலைக்குப் போகவேண்டாம் என்று தடுத்து நிறுத்திய நேரம் அது. தோட்டங்களில் தொழிலாளர் வேலைக்குப் போகக்கூடாது என்று ஒரு பக்கம் ஜே.வி.பி. யினரின் பயமுறுத்தல், வேலைக்குப் போ என்று மறுபக்கம் ஆயுதப் படைகளின் விரட்டல். இந்த நிலையில் தோட்டத் தொழிலாளிகள் இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தார்கள்.

அந்த நேரத்தில் தலைவர் தொண்டமான் என்ன சொன்னார்.?

பயமுறுத்தலின் காரணமாக வேலைக்குச் செல்ல வேண்டாமென தோட்டத்துரைமார் தடுத்தால்கூட அதனை புறியதுத்து தொழிலாளிகள் வேலைக்குச் செல்ல வேண்டும் என்றார்.

இப்படியான நெருக்கடியான சமயத்தில் தோட்டத் தலைவர்கள் தோட்டத் தொழிலாளிகளுக்குத் துணிவும் வீரமும் ஊட்டி அவர்களை வேலைக்கு அனுப்பிவைக்க வேண்டும். வேலைக்குப் போய், சம்பளம் கிடைக்காவிட்டால் அதனைப் பெற்றுத்தரவும், வேலைக்குப் போவதனால் ஏற்படக்கூடிய கஷ்டங்களையும் , நஷ்டங்களையும், இழப்புகளையும், பின்விளைவுகளையும் நிவர்த்தி செய்யும் பொறுப்பு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உடையது என்றும் சொன்னார்.

தோட்டங்களில் இ.தொ.கா. வைச் சேர்ந்த தோட்டத் தலைவர்கள் சுமார் 2000 பேர் இருக்கிறீர்கள். இந்த இரண்டாயிரம் பேரும் ஒரு முகமாகத் துணிந்து நின்று செயல்பட்டால் அத்தனை பேரையும் எந்த சக்தியாலும் அடிபணிய வைத்து விடமுடியாது என்று வீர முழக்கம் செய்து உற்சாகமூட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய துணிச்சலும் வீரமும் வேறு எந்தத் தலைவருக்கு வரும்? தொழிலாளர்கள் வேலைக்குப் போகாமல் நாட்டின் கூட்டுமொத்த பொருளாதாரத்தைச் சீரழித்து விடக்கூடாது என்று எண்ணியவர் தலைவர் தொண்டமான். அதனால் தான் அவர் இன்று ஒரு தேசியத் தலைவராக உயர்ந்து நிற்கிறார்.

அன்று வன்செயலாளர்கள் தோட்டங்களை நாசப்படுத்தினார்கள், மற்றும் தொழிற்சாலைகளை எரித்தார்கள். வேலைக்குப் போகாதீர் என்று தொழிலாளர்களைத் தடுத்தார்கள், வேலை கொடுத்த தோட்டத்து துரைமார்களைச் சுட்டு வீழ்த்தினார்கள். தங்கள் கட்டளைக்கு அடிபணியாத தோட்டத் தலைவர்களைத் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாக்கினார்கள். தேசிய நஷ்டம் விளைவிப்பதற்காக தேயிலை, ரப்பர் களஞ்சியங்களைத் தீயிட்டுப் பொசுக்கினார்கள்.


அவர்களுடைய அட்டூழியங்களைக் கண்டு கோழைகளானோர் அஞ்சி நடுங்கினார்கள். தோட்டத் தொழிலாளிகளைத் துணிச்சலோடு வழி நடத்திச் செல்வதற்குப் பதிலாக தோட்டத் தலைவர்கள் பயத்தையும் பீதியையும் ஊட்டினார்கள்.

இந்த நிலை கண்டு தொண்டமான் சீற்றம் கொண்டார். அச்சம் என்பது என்னவென்றே அறியாத தலைவர் அல்லவா அவர்?

அவர் ஆக்ரோஷத்தோடு சொன்னார் :

**இந்த நிலை தற்காலிகமானது. தொடர்ந்து நீடிக்கப் போவதில்லை. புயலைப் போலத் தோன்றியிருக்கும் இந்த குழப்ப நிலை, புயலைப் போலவே மறைந்து விடும். எந்த**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகைத்தொழில் பொருள் கண்காட்சியின் போது
அமைச்சரும் பிரதம மந்திரி டி.பி. விஜயதுங்காவும்.

நாளும் புயல் தொடர்ந்து அடித்துக் கொண்டிருக்கப்போவதில்லை. ஆகையால் தொழிலாளர்கள் வீர உணர்வோடு எதிர்த்து நிற்க வேண்டும்.

தோட்டத் தலைவர்கள் தொழிலாளர்களைச் சரியான பாதையில் இட்டுச் செல்ல வேண்டும் . சாவு என்பது ஆறிலும் உண்டு; அறுபதிலும் உண்டு. வரும் சாவை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. எனவே தோட்டத் தலைவர்கள் வீரத்துடனும் துணிச்சலுடனும் செயல்படவேண்டும். பொறுப்பைத் தட்டிக் கழிக்கக் கூடாதுஎன்று போதித்தார்.

*புயல் போல வரும், புயல் போலப் போகும் என்று திரு. தொண்டமான் கூறியது தீர்க்கதரிசன வாக்காகி விட்டது என்பதை இன்று காண்கிறோம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. தொண்டமான் மலையகத்தில் பொதுக் கூட்டங்களில் பேசும் போது வெளியிடும் கருத்துக்களை, இளைய சமுதாயத்தினர் நன்கு சிந்தித்துக் கருத்தில் கொள்ள வேண்டும்.

அவர் என்ன சொல்வார் தெரியுமா? இ.தெ.கா. சின்னஞ் சிறிய ஸ்தாபனம் அல்ல. அது ஆல விருட்சம் போல பரந்து விரிந்து வளர்ந்து விட்ட ஸ்தாபனமாகும். அந்த ஸ்தாபனத்தில் பல்வேறு மன உணர்வுகளைக் கொண்ட லட்சக் கணக்கானோர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்களில் சிலருடைய செயல்பாடுகள் சில சமயங்களில் குறைபாடுகள் உடையனவாக இருக்கலாம். அதனால் இ.தொ.கா. வில் குறையே இல்லை என்று சொல்லிவிட முடியாது. இ.தொ.கா.

மதுரை திருஞானசம்பந்தர் ஆதினகர்த்தர் ஸ்ரீல ஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகளுடன் அமைச்சர் தொண்டமான். பின்னால் திரு. ராகுலன், திரு. திருநாவுக்கரசு, திரு. எம்.எஸ். செல்லச்சாமி, திருமதி வேலம்மான் செல்லச்சாமி ஆகியோர் காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்கள் சிலரிடமும் குறைகள் இருக்கலாம். அந்தக் குறைகளை எல்லாம் நாமேதான் நிவர்த்திக்க வேண்டும்.

குறைபாடுகள் உள்ளன. அதனால் நாம் வேறு கட்சி அமைக்கப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டு புதுக் கட்சி அமைப்பதோ அல்லது இ.தொ.கா. வை உடைக்கும்படியாக பிளவுகளையும் பிரிவினைகளையும் ஏற்படுத்துவதோ சரியல்ல.

கட்சியின் குறைபாடுகளை நீக்க வேண்டுமானால், கட்சியில் சேர்ந்து, மும்முரமாக உழைத்து, கட்சிக்குள் செல்வாக்கைத் தேடிக் கொண்டு, உள்ளுக்குள் இருந்தவாறே மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும். உள்ளதை அழித்து விட்டால் எதிராளிகளுக்குத் தான் கொண்டாட்டமாகி விடும்.

இ.தொ.கா. சிதைந்து விட்டால், அது போன்ற ஓர் அமைப்பை உருவாக்குவது இலேசான காரியம் அல்ல. எவ்வளவு காலம் பிடிக்கும்? எவ்வளவு உழைப்புத் தேவைப்படும்? எவ்வளவு பணம் தான் செலவாகும்? ஆகையால் இ.தொ.கா. வைத் தொடர்ந்து பலப்படுத்திக் கொண்டு தான் அதற்குள் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். புதுமைகளைப் புகுத்த வேண்டும்.

இன்று எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், எந்தத் தலைவர் ஆட்சியைப் பிடித்தாலும் இ.தொ.கா. வைத் தம் பக்கம் வைத்துக்கொள்ளவே முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் உள்ளாந்தரம் என்ன?

இ.தொ.கா. உறுப்பினர்களாகிய நம்மிடம் இரண்டு பெரிய சக்திகள் இருக்கின்றன. ஒன்று நம்மிடையே உள்ள கட்டுக் கோப்பு, ஒற்றுமை. மற்றது நம்மிடம் உள்ள கூட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'தலைவர் தொண்டமான்' நூல் வெளியீட்டு விழாவில் முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் சபையோருக்கு வணக்கம் தெரிவித்து தமது சொற்பொழிவை ஆரம்பிக்கிறார். பக்கத்தில் அமைச்சர் தொண்டமான் காணப்படுகிறார்.

மொத்தமான உழைப்பு. நமது உழைப்பில் தான் இந்த நாட்டின் முக்கியமான பொருளாதாரம் தங்கியிருக்கிறது. இந்த நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி வருவாயில் பெரும் பங்கு தங்கியிருக்கிறது. நாம் முரண்டிக் கொண்டால் இந்த நாட்டின் பொருளாதாரம் நொறுங்கிவிடும் என்பதை ஆட்சிக்கு வருவோர் உணர்ந்திருக்கிறார்கள்.

அதனால் தான் நாம் ஒற்றுமையாக ஒன்றிணைந்து ஒரே தொழிற்சங்கத்தில் கட்டுப்பட்டு இ.தொ.கா. வின் கொடியின் கீழ், ஒரு தொண்டமானின் ஆணையை ஏற்று நடப்பதை அவர்கள் அந்தரங்கத்தில் விரும்புவதில்லை.

எனவே அவர்கள், நேரடியாகவும் மறைமுகமாகவும் இ.தொ.கா. வைப் பலவீனப்படுத்திவிட முயன்றுவருகின்றார்கள். தொண்டமானிடம் வெளியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்புறவாகப் பேசுபவர்கள் கூட மறைமுகமாக இ.தொ.கா. வை உடைக்க விரும்பும் குழுக்களுக்கும் கோஷ்டிகளுக்கும் உருப்போட்டு, விபூதி சாற்றி, வேப்பிலை அடித்து வருகிறார்கள். அவர்களுடைய இப்படியான சதிகளுக்கும், சூழ்ச்சிகளுக்கும், உச்சாடனங்களுக்கும் இ.தொ.கா. அங்கத்தவர்கள் பலியாகி விடக்கூடாது.



4. 'அவுட் ஒப் பொண்டேஜ்' என்ற ஆங்கில நூலை அமைச்சர் பிரிட்டிஷ் தூதுவரிடம் கையளிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புடைவை ஆலை ஒன்றுக்கு அமைச்சர் விஜயம் செய்த போது அவர் கோலாகலமாக வரவேற்கப்படும் காட்சி.

# அனைவரையும் மதிப்பவர்

தலைவர் தொண்டமான் நிர்வாக விஷயங்களில் கண்டிப்பாக இருக்கும் அதே வேளையில், மக்களோடு பழகுவதில் பண்பும் இதமும் கொண்டவராகவும் விளங்குகிறார். அவர் மேற்கொள்ளும் எந்தக் காரியத்திலும் வெற்றி காண்பதற்கு அவருடைய இந்த சுமுகமான மக்கள் உறவும் ஒரு காரணமாகும்.

எத்தனை வருஷங்கள் ஆனாலும் சரி, ஒரு தெரிந்த முகத்தைக் கண்டால் புன்முறுவல் பூத்து, தலையசைத்து, ''எப்படி சௌக்கியமா?'' என்று கேட்காமல் போக-மாட்டார். இந்த வகையில் அவருடைய ஞாபகசக்தி அதிசயமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சங்க பேச்சுவார்த்தைகள், போராட்டங்களில்கூட அவர் எதிராளியை வளைத்துப் போடுவாரே தவிர எதிர்த்து மனமுறிவு கொள்ள இடமளிக்க மாட்டார். தமது கருத்துக்களை வலியுறுத்தும் அதே வேளையில் எதிர்க்கட்சியின் கருத்துகளுக்கும் மதிப்பளிப்பார். மனிதனை மனிதனாக மதிக்கத் தெரிந்தவர் அவர். மனிதனுடைய வேறுபட்ட கருத்துக்களுக்காக மனிதனை வெறுப்பவர் அல்லர் அவர். பாராளுமன்றத்தில் அவர் தமது எதிராளியினருடன் காரசாரமாக விவாதிப்பதுண்டு. ஆயினும், வெளியே வந்ததும் அவர்களில் எவரும் திரு. தொண்டமானிடம் பகைமை பாராட்டியதில்லை. அதற்கு காரணம் அவர் காழ்ப்புணர்ச்சியுடன் எதையும் பேசுவதில்லை என்பதை அவர்கள் உணர்வார்கள். இத்தகைய உயர்வான நடத்தைகளினால் அவர் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் உட்பட அனைவரிடமும் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் பெற்ற ஒரு தலைவராகத் திகழ்கிறார். திரு. தொண்டமானுடைய வெற்றிச் சாதனைகளுக்கு அவருடைய மேற்கூறிய பண்புகளும் தக்க காரணங்கள் என்று கொள்ளலாம்.

மலையக மக்களில் சுமார் இருபத்தைந்து வீதத்தினர் வேலை வாய்ப்பை எதிர்நோக்கி நிற்கும் இளைஞர்களாவர். இவர்களில் பாதிப்பேர் உயர் கல்வி நிலையில் படித்துக் கொண்டிருப்பவர்கள். இவர்களுக்கு சிறந்த ஓர் எதிர் காலத்தை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற கவலை தலைவர் தொண்டமானுக்கு எப்போதும் உண்டு.

தலைவர் தொண்டமானுடைய இந்த நல்ல நோக்கத்தை அறிந்த மலையக இளைஞர் சமுதாயம் எப்போதும் அவருக்குப் பக்கபலமாக நிற்கிறது. அவர் இடும் ஆணைதனை நிறைவேற்ற அந்த இளைஞர்கள் எப்போதும் ஆயத்தமாக நிற்கிறார்கள். இளைஞர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணை நிற்பது தலைவர் தொண்டமானின் மற்றொரு பலம் ஆகும்.

இந்த இளைஞர்களுக்கு அரச வேலை வாய்ப்புக்களைத் தேடிக்கொடுக்க வேண்டும் என்ற அக்கறையில் தலைவர் தொண்டமான் அரசிடம் ஒரு புதிய கோரிக்கையை புதிய கோணத்தில் சமர்ப்பித்திருக்கிறார். அதாவது மலையகத் தமிழ் மக்களுக்கு அரசாங்கம் சலுகை அடிப்படையில் மேலதிக நியமனங்களை வழங்கவேண்டும் என்பதே அந்தக் கோரிக்கையாகும். பொன்விழா மாநாட்டுத் தலைமையுரையில் இந்தக் கோரிக்கையை அவர் சாங்கோபாங்கமாக விளக்கிப்பேசியுள்ளார்.

அவர் கூறியிருப்பதாவது :-

''மலையக மக்கள் இந்த நாட்டில் வாழும் ஏனைய இனமக்களைவிட பல வழிகளில் பின்தங்கிவர்களாவர். இனவிகிதாசாரப்படி நியமனங்கள் வழங்கினாலும் இவர்கள் பயனடைய மாட்டார்கள். காரணம் என்ன?

''நாற்பது ஆண்டுகளாக இந்திய வம்சாவளி மக்கள் நாடற்றவர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் இந்த நாட்டுப் பிரஜைகளாக மதிக்கப்படாததால், அவர்களுக்கு நியாயமான அரச சலுகைகள் கிடைக்கவில்லை. கல்வி, காணி, வீடு, சுகாதார வசதி ஆகியவற்றில் அவர்கள் ஒதுக்கப்பட்டவர்களாகவே வாழ்ந்திருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்கள் இன்று எப்படி திடுதிடுப்பென்று ஏனைய மக்களுடன் போட்டிபோட முடியும்? அவர்களுக்கு கல்வி தராதரம் இருக்குமா? ஏனைய தகைமைகள் இருக்குமா?

''எனவே, மலையக இளைஞர்களும் ஏனைய மக்களைப் போல் வளர்ச்சி காணும் வரை அவர்களுக்கு விசேஷ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலுகைகள் வழங்கப்படவேண்டும். விகிதாசார அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படுமானால் அவர்கள் தொடர்ந்தும் பின்தங்கிய நிலையிலேயே இருக்க நேரிடும். ஆகையால், மலையகத்தார் விஷயத்தில் ஒரு புதிய அணுகு முறை பின்பற்றப்படவேண்டும்.

''விகிதாசார அடிப்படையில் நியமனங்கள் வழங்குவதைத் தவிர்த்து, மலையக மக்களை ''ஒரு வசதி குறைந்த சமுதாயமாக'' மதித்து மேலதிக அரச நியமனங்களை அவர்களுக்கு வழங்க வேண்டும்.''

இப்படிக் கேட்டிருக்கிறார் தலைவர் தொண்டமான்.

இப்படி ஒரு குரலை இ.தொ.கா. வைத்தவிர, அதன் தலைவர் தொண்டமானைத் தவிர வேறு யார் கிளப்ப முடியும்.?

படித்த இளைஞர்கள் சிந்தித்துப் பார்ப்பார்களே யானால் தொண்டமானுடைய அக்கறையையும், எதிர்கால இளைஞர் சமுதாயத்தின் நல்வாழ்விலும் ஏற்றத்திலும் அவர் கொண்டிருக்கும் தீர்க்கதரிசனமான சிந்தனையையும் நன்கு உணர்ந்து கொள்வார்கள்.

மேற்கொண்ட கோரிக்கையில் தலைவர் தொண்டமான் வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கை சகலருக்கும் உண்டு. அப்படி அவர் வெற்றி பெற்றால் அவர் ''வெற்றியின் இரகசியம் என்ன?'' என்ற பட்டியலில் அதுவும் சேர்ந்துவிடும் அல்லவா?

## பெண்குலத்தின் ஆரதவு பெற்றவர்.

தலைவர் தொண்டமானுடைய வெற்றிகளுக்கெல்லாம் மற்றுமொரு காரணம் அவர் இந்திய வம்சாவளியைச் சார்ந்த பெண்களின் ஆதரவையும் அபிமானத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருப்பதாகும். இ.தெ.கா. வின் ஆரம்ப காலத்தி-லிருந்தே அவர், தோட்டத்தில் வேலைபார்க்கும் பெண்களை ஒரு சக்தியாக உருவாக்கி வந்திருக்கிறார். அதனால் பெண்கள் உறுதியும் ஒற்றுமையும் மிக்கவர்களாக விளங்கி வந்திருக்கிறார்கள். சில சமயங்களில் பெண்கள் காட்டிய துணிச்சல் தலைவர் தொண்டமானையே பிரமிக்க வைத்திருக்கிறது.

1970 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியினர் காணிச் சீர்திருத்தச் சட்டம் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தனர். வெள்ளைக்காரக் கம்பனிகளிடமும் தனியாரிடமும் உள்ள தேயிலை, ரப்பர் தோட்டங்களை தேசிய மயம் என்ற போர்வையில் அரசுடைமையாக்கி, அவற்றைத் துண்டு துண்டாகக் கூறுபோட்டு விட்டால் தொண்டமானுக்கு உள்ள தொழிலாளர் ஆதரவையும் பலத்தையும் குறைத்து விடலாம் என்று திட்டமிட்டது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம். இந்த கொடிய சட்டத்தின் கீழ் தலைவர் தொண்டமானுக்கு உரிமையாகவிருந்த பல நூறு ஏக்கர் தோட்டங்கள் கூடப் பறிக்கப்பட்டன.

தமது தோட்டங்கள் எல்லாம் பறிபோகின்றனவே என்று தலைவர் தொண்டமான் சிறிதும் கவலைப்-படவில்லை. ''சொந்தமாக எனக்குத் தோட்டம் இல்லை யென்றால், நான் இன்னும் அதிகமான சுதந்திரத்தோடு, தொழிலாளர்களுடன் தொழிலாளியாக நிமிர்ந்து நின்று அவர்களுடைய உரிமைகளுக்காக இன்னும் அதிகமான வேகத்துடன் போராடலாம் அல்லவா?'' என்று கூறிக் கொண்டார். தொண்டமான்.

தனியார் தோட்டங்கள் அரசாங்கத்தால் கையேற்கப்-பட்டதும், அங்கிருந்த இ.தொ.கா. தொழிலாளர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் விரட்டப்பட்டார்கள். வெளியேற்றப்பட்டார்கள். அவர்களுடைய தொழிற்சங்க உரிமைகள் மறுக்கப்பட்டு, பலவிதமான கஷ்டங்களுக்குள் அவர்கள் தள்ளப்பட்டார்கள்.

தோட்டங்களை எடுத்து, அவற்றைத் துண்டு போட்டு, தங்களுக்கு வேண்டிய மக்களைக் குடியேற்ற வேண்டும் என்ற கொள்கை 1975 முதல் 1977 ஆம் ஆண்டுகளில் மும்முரமாக அமுல் செய்யப்பட்டது. ஒரு சந்தர்ப்பத்தில் நுவரெலியாப் பகுதியில் 7000 ஏக்கர் காணியை அரசாங்கம் சுவீகரிப்பது என்று முடிவு செய்து, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதுவரை பொறுத்திருந்த தலைவர் தொண்டமான் மிகவும் ஆக்ரோஷத்தோடு பொங்கியெழுந்தார்.

"நுவரேலியாப் பகுதியில் நிலைபதியாக வாழ்ந்து தொழில் பார்த்து வரும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களை விரட்டியடிக்க முடியாது. இந்த ஏழாயிரம் ஏக்கர் நிலம் கொண்ட பகுதிகளை அரசு பறித்தெடுக்க நான் அனுமதிக்க மாட்டேன். போராடியே தீருவேன்" என்று மிகுந்த வீரத்தோடு எச்சரித்தார் திரு. தொண்டமான்.

நுவரேலியாப் பகுதியில் உள்ள இந்திய வம்சாவளியினரைக் கலைத்து விட்டால், அங்கு திரு. தொண்டமானுக்கு உள்ள மக்கள் பலம் ஆட்டங்கண்டு விடும் என்பது ஆட்சியாளர் போட்ட தப்புக் கணக்கு ஆகும். இந்த சூழ்ச்சித் திட்டம் நிறைவேற முடியாதபடி செயல்பட வேண்டிய அவசியம் திரு. தொண்டமானுக்கு ஏற்பட்டது.

அரசாங்கத்தின் திட்டத்தைத் தடுத்து நிறுத்துவது சாத்தியமாகுமா? அப்போதும் அவசரகாலச் சட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறையிலிருந்தது. அந்தச் சட்டத்தின் கீழ், எதிர்ப்புத் தெரிவிப்பவர்களை எல்லாம் கைது செய்து சிறையில் தள்ளி விடலாம். அப்படிச் செய்வோம் என்று ஆட்சியாளர் பயமுறுத்தியும் பார்த்தனர். ஆனால் தலைவர் தொண்டமானின் கட்டளையை ஏற்று, தொழிலாளர்கள் அரசின் நடவடிக்கையை எதிர்ப்பது என்று முடிவு செய்தனர். இந்த முடிவை இ.தொ. காவும் அங்கீகரித்தது.

போராட்டம் ஆரம்பித்தது. ''நீங்கள் எந்தக் காரணம் கொண்டும் இந்த ஏழாயிரம் ஏக்கரை எங்களிடமிருந்து பிடுங்கிக் கொள்ள முடியாது'' என்று ஆர்ப்பாட்டம் செய்தார்கள் தொழிலாளர்கள்.

மலையக இளைஞர் வர்த்தக சங்கம் அளித்
வரவேற்பில் அமைச்சர் தொண்டமான் மலர் மால
சூட்டப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டெவன் தோட்டத்தில் போராட்டம் நடைபெற்ற போது, அதைத் தடுப்பதற்காக பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். லட்சுமணன் என்ற ஒரு தொழிலாளி சூடுபட்டு மரணமானார். எனினும் போராட்டம் தடைப்படவில்லை.

வெஸ்வேட் ஹோ என்ற தோட்டத்தைச் சுவீகரிக்கும் நோக்கத்துடன் நுவரேலியா கவர்மெண்ட் ஏஜண்ட், நிலத்தை அளவை செய்வதற்காக, நில அளவைக் காரர்களையும், மற்றும் சிப்பந்திகளையும் அழைத்துக்-கொண்டு, பொலீஸ் காவலுடன் வந்து சேர்ந்தார். எல்லோரும் ஜீப் வண்டிகளில் ஏறிக்கொண்டு தோட்டத்துக்குள் புக எத்தனித்தார்கள. தோட்டத் தொழிலாளர்கள் ஆண்களும், பெண்களும், பிள்ளைகளுமாக அவர்களுடைய பிரவேசத்தை எதிர்த்து நின்றார்கள். வந்தவர்கள் பலவந்தமாக உள்ளே புகுந்துவிட முனைந்தார்கள்.

அந்த சமயத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்த வீராங்கனைகளான தோட்டத் தொழிலாளப் பெண்கள் செய்த துணிகரமான காரியம் அனைவரையும் மயிர்க்கூச்செறியும்படி செய்தது.

அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா?


ஜீப் வண்டிகள் ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாக வந்து கொண்டிருந்தன. ஆண் தொழிலாளர் வரிசையாக நின்று தடுத்தும் அந்த வண்டிகள் நிறுத்தப்படவில்லை. உடனே பெண்கள் கோஷ்டியாக, குடும்பலாக முன்னே வந்தார்கள். தங்கள் இடுப்பில் இருந்த பச்சைக் குழந்தைகளைத் திடீரென்று ஜீப் வண்டிகள் வந்துகொண்டிருந்த பாதையில் வரிசையாகக் கிடத்திவிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வேண்டுமானால் இந்தக் குழந்தைகளை நசுக்கிக் கொன்றுவிட்டு முன்னேறுங்கள்'' என்று கத்தினார்கள். ''இது நாங்கள் வாழும் தோட்டம். நாங்கள் வேலை செய்து பிழைக்கும் தோட்டம். இந்தத் தோட்டத்திலிருந்து எங்களை வெளியேற்ற உங்களுக்கு அதிகாரம் இல்லை. உங்களுக்கு உரிமை கிடையாது. வேண்டுமானால் எங்கள் தலைவர் தொண்டமான் ஐயாவுடன் பேசி, அவருடைய அனுமதியைப் பெற்றுவிட்டு வாருங்கள்'' என்று சொன்னார்கள்.

வந்தவர்கள் அயர்ந்து போனார்கள். உரிமை காக்கத் தங்கள் உயிர்ச் செல்வங்களான குழந்தைகளையே பலியிடத் துணிந்த அந்த வீரப் பெண்களின் வீராவேசத்தைக் கண்டு கலங்கிப் போனார்கள். என்ன

மலையக விழா வொன்றின்போது பொதுச் செயலர் எம்.எஸ். செல்லச்சாமி, நிதிச் செயலர் அண்ணாமலை ஆகியோருடன் தலைவர் தொண்டமான் காணப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வது என்று அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. வந்த வழியே திரும்பிச் சென்றார்கள் அவர்கள்.

தலைவர் தொண்டமான் எப்படித் துணிச்சல் நிரம்பிய ஒரு வீரராகத் திகழ்கிறாரோ, அப்படியே அவர் பின்னால் திரண்டு நிற்கும் தொழிலாளர்களும், குறிப்பாகப் பெண்களும் வீரமும் தியாகமும் நிரம்பியவர்களாகக் காணப்படுகிறார்கள்.

பெண்கள் இப்படியாக தம் அருமைக் குழந்தைகளையே பறிகொடுத்து தாங்கள் வாழ்ந்த பூமித்தாயைக் காப்பாற்ற முன்வந்த சம்பவம் காட்டுத் தீபோல் எங்கும் பரவியது. உடனே, தலவாக்கொல்லை, ஹட்டன், மஸ்கேலியா ஆகிய பகுதிகளில் எல்லாம் ஒரு பெரிய வேலைநிறுத்தப் போராட்டம் ஆரம்பித்தது. ஒரு லட்சத்-துக்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள். நிலைமையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தால் சமாளிக்க முடியவில்லை. உடனே அரசாங்கம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை அழைத்துப் பேசியது. அந்த ஏழாயிரம் ஏக்கர் தோட்டத்துப் பூமியையும் கையேற்கும் நடவடிக்கையைக் கைவிட்டது.

அன்று அப்படி ஒரு போராட்டத்தை தலைவர் தொண்டமான் நடத்தியிராமல் இருந்தால், நுவரேலியாப் பகுதியில் உள்ள தோட்டங்கள் எல்லாம் அழிந்து போயிருக்கும். இந்தப் போராட்டத்தில் திரு. தொண்டமான் ஒரு வெற்றிவீரராக சிறப்புப் பெற்றமைக்கு காரணமாய் இருந்தவர்கள் பெண்கள் தாம் என்பதைச் சரித்திரம் பெருமையோடு பொறித்து வைத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சம்பவத்தைப் போலவே, தலைவர் தொண்டமான் கண்ட வெற்றிகளில் எல்லாம் தோட்டத் தொழிலாளர்களான பெண்மணிகளின் பங்களிப்பும் கணிசமான அளவு உள்ளது. அதனால் தான் தலைவர் தொண்டமான் பெண்மணிகளின் முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறார்.

1990 மார்ச் 24, 25 ஆம் திகதிகளில் அட்டன் மாநகரில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொன்விழா கொண்டாடப்பட்டது அல்லவா?

அந்த மாநாட்டில் கூட தலைவர் தொண்டமான் பெண் தொழிலாளர்களுக்கான ஒரு முக்கிய தீர்மானத்தை இ.தொ.கா. நிறைவேற்றும்படி செய்துள்ளார்.

அந்தத் தீர்மானம் வருமாறு:

''பெருந்தோட்டத் துறையில் ஐம்பது சதவீதத்துக்கும் அதிகமானோர்கள் பெண் தொழிலாளர்களேயாவர். அவர்கள் நாள் ஒன்றுக்கு 8 மணித்தியாலத்துக்கும் அதிகமாக வேலைசெய்கிறார்கள். அதுவும் கடினமாக, களைப்படையச் செய்யும் படியான வேலைகளைச் செய்கிறார்கள்.

''இவர்களுக்கு தோட்ட வேலையைவிட, இன்னும் இரண்டு வகையான வேலைப் பழுக்கள் இருக்கின்றன. இவர்கள் தாயாக இருந்து, தமது பிள்ளைகளையும் வளர்த்தெடுக்க வேண்டியுள்ளது. அத்தோடு மனையாளாக இருந்து வீட்டுவேலைகளையும் கவனிக்க வேண்டியுள்ளது. இவர்களுக்கு கிடைக்கும் ஓய்வு போதாமையினால் இவர்கள் அடிக்கடி சுகவீனமுற்று உடற் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். பெண் தோட்டத் தொழிலாளர் தங்களது உழைப்புக் காலத்திலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப்பும், பலவீனமும் அடைகிறார்கள். அதனால் பல சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள்.

''பெண் தொழிலாளர்களின் இன்றைய நிலைக்கு அதிக கவனம் செலுத்த வேண்டிய அவசியத்தை மனதில் கொண்டு இவர்களின் வேலை நேரத்தை மறு-சீரமைக்குமாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்னர் விடுத்திருக்கும் கோரிக்கையை மீண்டும் வலியுறுத்துகின்றது.

''தோட்டப் பெண் தொழிலாளருக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள மகப்பேற்றுக் கால நலன்களை மூன்றில் ஒரு பங்கு குறைப்பதற்கு மேற்கொள்ளப் படவிருக்கும் நடவடிக்கை குறித்தும் காங்கிரஸ் கவலை தெரிவிக்கின்றது.

''இந்த சூழ்நிலையில்........

(அ) தோட்ட முகாமைத்துவம் பெண் தொழிலாளர்களின் சேவைநேரம், ஒரு நாளைக்கு 6 மணித்தியாலத்துக்கு மேற்படாத விதத்தில் மறுசீரமைக்கப்பட வேண்டும். அல்லது ஆண் தொழிலாளர்களைப் போன்று வேலைப் பங்கு உற்பத்தி அளவு முறையை அமுலுக்கு கொண்டுவரவேண்டும்.

(ஆ) தோட்டப் பெண் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த பேறுகாலக் கொடுப்பனவில் ஒரு பகுதியைக் குறைக்கும் உத்தேசத்தை மீள் பரிசீலனை செய்வதுடன் இந்நாட்டின் ஏனைய பிரஜைகளுக்கு வழங்கப்பட்டு வரும் சேவைகளைப் போன்ற பேறுகால வசதிகளை ஏற்படுத்தல் வேண்டும்.

இத்தீர்மானத்தின் நோக்கத்தை அடைவதற்கான பொருத்தமான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்-வதற்கான அதிகாரத்தை இ.தொ.கா. மாநாடு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கிரஸ் தலைமைத்துவத்துக்கு அதிகாரம் அளிக்கிறது.''

மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் தெரிவது என்னவென்றால், தலைவர் தொண்டமான் பெண்களுடைய நலனில் விசேஷ அக்கறை கொண்டுள்ளார் என்பது தான். இ.தொ.கா. வின் ஆரம்பகாலத்திலிருந்தே அவர் பெண்களை இ.தொ.கா.வின் ஒரு முக்கிய அங்கமாக மதித்துவந்துள்ளார். அதனால் தான் அவர் மாதர் பிரிவைப் பலப்படுத்த வேண்டும் என்ற கருத்தினை சகல கூட்டங்களிலும் மாநாடுகளிலும் வலியுறுத்தி வருகிறார். பெண்கள் தம்மீது வைத்திருக்கும் நம்பிக்கையையும் பற்றினையும் அவர் நன்றியுணர்வுடன் மதிக்கிறார். மாதர்



சுற்றுலாத்துறை அமைச்சராக தலைவர் தொண்டமான் சத்தியப்பிரமாணம் செய்துவிட்டு வந்ததும் அவருடைய ஆதரவாளர்களால் மாலை அணிவித்து வரவேற்கப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணி பலமானால் அது ஆடவர் அணியையும் கட்டுக்கோப்பு குலையாமல் விசுவாசம் குன்றாமல் வைத்துக் கொள்ளும் என்று அவர் கருதுகிறார். மாதர் அணியின் பூரண பக்கபலம் இருந்தால் அது இ.தொ.கா. வின் வெற்றிகளுக்கும், தலைவர் என்ற வகையில் தமது வெற்றிக்கும் உறுதுணையாக அமையும் என்ற அவருடைய கருத்து அனுபவத்தால் பெற்றதொன்றாகும்.

## சிறப்பான தலைவர்

இனபேதம், மதபேதம், உயர்வு, தாழ்வு, பாராமல் சகலரையும் சரிசமமாக மதிப்பவர் தலைவர் தொண்டமான். அவருடைய வெற்றிக்கு இதுவும் ஒரு காரணமாகும். இ.தொ.கா. வில் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் எல்லாரும் அங்கம் வகிக்கின்றனர். அனைவரையும் அவர் ஒரே நோக்கிலேயே காண்கின்றார். மலைநாட்டில் எத்தனையோ ஜாதிக்-காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் தொண்டமானைத் தம் ஜாதிக் காரராகவே எண்ணிப் பழகுகிறார்கள். அன்பு பாராட்டு கிறார்கள்.

கடந்த ஏப்ரல் மாதம் ஹட்டன் நகரில் இ.தொ.கா. வின் பொன்விழாவும், 30 ஆவது பேராளர் மாநாடும் நடைபெற்றன. மாபெரும் கூட்டம் கூடியது. பொன்-விழாவில் விசேஷ அதிதியாக கலந்து கொண்டு சொற்பெருக்காற்றிய ஜனாதிபதி பிரேமதாசா தலைவர் தொண்டமானை வெகுவாகப் பாராட்டினார்.

''உங்கள் தலைவர், திரு. தொண்டமான், இன, மத, மொழி பேதமற்றவர். அதனால் அவர் இந்த நாட்டில் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் மதிக்கப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாதையைப் பெற்றுக் கொள்கிறார். வெளிநாடு-களுக்குச் சென்றாலும் அப்படியே. இதற்கு மேல் உயர்ந்த கௌரவம் எதுவும் இல்லை'' என்றார் ஜனாதிபதி பிரேமதாசா.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''திரு. தொண்டமான் பொதுச் சேவையில் ஈடுபட்டிருந்த ஆரம்ப நாட்களில் நான் ஒரு சிறுவன். பாடசாலை மாணவன். அப்போதெல்லாம் அவர் ஆற்றிய பணிகளை நான் பத்திரிகைகளில் படித்து வியந்திருக்கிறேன். அவர் பாராளுமன்றத்தில் ஒரு பிரதிநிதியாக அமர்ந்து பேசிய அரசியல் பேச்சுக்களை நான் பொதுமக்கள் கலரியில் அமர்ந்திருந்து கேட்டிருக்கிறேன். அன்றிலிருந்தே அவருடைய நிதானமான போக்கினையும், நெறிதவறாத அரசியல் வாழ்க்கையையும் அவதானித்து வந்தி-ருக்கிறேன்.

''திரு. தொண்டமான் உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசமாட்டார். நல்லவர் போல் நடித்துக் கொண்டு சதி செய்யவும் மாட்டார். எதையும் நேருக்கு நேர் பேசும் துணிவு கொண்டவர் அவர். எந்தப் பிரச்சினையையும் நேர்மையாகவும், ஆழமாகவும் அணுகி தீர்வுகாண்பதில் வல்லவர் அவர். எல்லாவற்றிற்கும் மேலாக, பொது ஜன சேவையில் நாட்டம் கொண்டவர் அவர். இந்த மூன்று குணாதிசயங்களுமே அவருடைய வெற்றியின் இரகசியங்களாகும்.''

இவ்வாறு தலைவர் தொண்டமானுடைய வெற்றியின் இரகசியங்களைக் கோடிகாட்டிப் பேசியுள்ளார் ஜனாதிபதி பிரேமதாசா. ஜனாதிபதியின் கருத்துக்களை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு விஷயத்தையும் அன்று ஜனாதிபதி குறிப்பிட்டார். ''திரு. தொண்டமான் பண வலிமையினாலும், ஆயுத பலத்தினாலும் அவர் வெற்றிகளை ஈட்டவில்லை. அஹிம்சை, தியாகம், உண்மை, நேர்மை ஆகிய நாற்படைகளைக் கொண்டே அவர் சகல போராட்டங்களையும் நடத்தி வெற்றிகளைக் குவித்துள்ளார். அவருக்கு தமிழ் மக்கள் மட்டுமின்றி சிங்கள மக்களும் மரியாதை செலுத்துவது ஆச்சரியமான-தல்ல. எதிர்காலத்திலும் அவர் மிகமிக உயர்வாகவே மதிக்கப்படப் போகிறார்.''

இத்தகைய ஒரு பாராட்டு இந்த நாட்டில் வேறு யாருக்குக் கிடைக்கும்? அதுவும் நாட்டின் ஜனாதிபதியிடமிருந்தே?

அமைச்சர் தொண்டமானுடைய வாழ்க்கை வரலாற்-றைக் கூறும் ''தலைவர் தொண்டமான்'' என்ற நூலின் வெளியீட்டு வைபவத்தில் தொண்ணூறு வயதைத் தாண்டிய மூதறிஞர், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் ஓர் கடுமையான, புதுமையான கருத்தை வெளியிட்டார்.

அவர் சொன்னார்: தலைவர்கள் இரண்டு வகைப்படுவர். தமது தலைமைப் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, தொண்டர்கள் சொல்லும் தவறான காரியங்களுக்கெல்லாம் ஆமா போட்டுக்கொண்டு, தவறான வழியில் தொண்டர்களுக்குப் பின்னால் வால் பிடித்துக்கொண்டு இழுபட்டுப் போகும் தலைவர்கள் ஒரு வகை. தாம் சரியான நிலையில் நின்றுகொண்டு மக்களை, தொண்டர்களை நெறியான முறையில் நேர்மையான பாதையில் வழி நடத்திச்செல்லும் தலைவர்கள் ஒரு வகை, தலைவர் தொண்டமான் இரண்டாவது வகையைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தவர். அவர் ஒரு போதும் தவறான வழியில் செல்ல மாட்டார். துணிவோடு தலைமை தாங்கி, சரியான வழியிலேயே மக்களை இட்டுச் செல்வார். தொண்டர்களுக்குப் பின்னர் இழுபட்டுப் போகும் தலைமை அல்ல தொண்டமானின் தலைமை. தொண்டர்களைத் தம் பின்னால் இழுத்துச் செல்லும் வலிமையான தலைமை தொண்டமானுடையது. திரு. தொண்டமானை நான் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அறிவேன். அவர் தலைமைத்துவத்தின் பண்புகளை அவதானமாக நான் கவனித்து வந்திருக்கிறேன். அந்த அனுபவத்தைக் கொண்டே நான் இவ்வாறு கூறுகிறேன்'' என்றார் முத்தமிழ்க் காவலர்.



புடைவைத் தொழிற்சாலை ஒன்றில் அமைச்சர் தொண்டமான் இயந்திர சாதனங்களைப் பார்வையிடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் தொண்டமான் நான்கு போதனைகளைத் தொழிலாளர்களுக்கு அடிக்கடி வலியுறுத்திக் கூறுவார்.

1. மது அருந்தாதீர்கள். போதைப் பொருள்களுக்கு அடிமையாகாதீர்கள்.
2. சிக்கனமாயிருங்கள். சேமிக்கப் பழகிக் கொள்ளுங்கள். மழைகாலத்துக்கு அது உதவும்
3. கல்வியைக் கண் என மதியுங்கள். நீங்களும் படியுங்கள். உங்கள் பிள்ளைகளையும் கற்றவர் ஆக்குங்கள்.
4. ஒற்றுமையாய் இருங்கள். கட்டுக்கோப்பைக் குலைக்காதீர்கள். ஒன்றுபட்டால் தான் உண்டு உயர்வு.

திரு. தொண்டமான் கூறும் கருத்துரையில், இந்த நான்கு போதனைகளுமே கொடுமுடிகள் எனலாம்.

தலைவர் தொண்டமானுடைய போதனைகளின் பயனாக மலைநாட்டில், தோட்டப் பகுதிகளில், பலர் குடிப் பழக்கத்தை விட்டு விட்டார்கள். பலர் சேமிப்புத் திட்டங்களில் சேர்ந்து சிறுகச் சிறுகச் சேமித்து வருகிறார்கள். மலைநாட்டில் படிப்பறிவும் கல்வி வளர்ச்சியும் கணிசமான வேகத்தில் அதிகரித்து வருகின்றன. தொழிலாளர் இ.தொ.காவின் குரலுக்கு செவிகொடுத்து ஒற்றுமையைப் பாராட்டும் அளவிற்கு கட்டிக் காத்து வருகிறார்கள். இவையெல்லாம் தலைவர் தொண்டமான் கண்டுவரும் வெற்றிகளுக்கு ஊன்று கால்களாகத் திகழ்கின்றனவன்றோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியின் இரகசியம்

*1990 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30 ஆம் திகதி தலைவர் தொண்டமான் தமது 77 ஆவது வயதை நிறைவு செய்கிறார். இந்த 77 ஆண்டுகளில் அவர் பெற்றிருக்கும் அனுபவம் அளப்பரியது. 1940 ஆம் ஆண்டில் அவர் பொதுவாழ்வில் தீவிரமாக ஈடுபட்டார். எனவே அவரது பொது வாழ்வுக்கு 50 ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டன.*




*அமைச்சர் தொண்டமானுக்கு கொழும்பில் கலைஞர்கள் அணித்த பாராட்டு விழா. படத்தில் அமைச்சர், திரு. எம்.எஸ். செல்லச்சாமி, முன்னாள் இந்திய தூதுவர் மல்ஹோத்ரா ஆகியோர் காணப்படுகின்றனர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த 50 ஆண்டு காலத்தில் அவர் ஈடுபட்ட, அவர் தலைமைதாங்கிய, தொழிற்சங்கப் போராட்டங்களும், அரசியல் போராட்டங்களும் மிகப்பல. ஒரு சிலவற்றில் அவர் தோல்வி கண்டிருக்கலாம். ஆனால் மிகப்பல போராட்டங்களில் வெற்றி கண்ட வீரர்தான் தொண்டமான். அத்தனை போராட்டங்கள் நடத்தி வெற்றிக்கு மேல் வெற்றியீட்டிய இன்னொரு அரசியல் தலைவரை நாம் இலங்கையில் காணமுடியாது. அவர் ஈட்டிய அரசியல் வெற்றியில் சிலவற்றை இந்நூலின் முன் பக்கங்களில் காணமுடிந்தது. மிகப் பெரிய வெற்றி என்று கணக்கிடக் கூடியது, இலங்கைவாழ் இந்திய வம்சாவளி மக்கள் அனைவருக்கும் அவர் பிரஜா உரிமையும், வாக்குரிமையும் பெற்றுக்கொடுத்த மாபெரும் வெற்றியேயாகும்.

தலைவர் தொண்டமானுடைய வெற்றியின் இரகசியம் என்ன?

If you wish success in life, make perseverance your bosom friend, experience your wise counsellor, caution your elder brother and hope your guardian Angel

—Addison

''வாழ்க்கையில் நீ வெற்றியடைய வேண்டுமானால், தளராத உழைப்பை உன் உயிர் நண்பனாக கொள். நீ பெற்ற அனுபவங்களை உன் ஆலோசகராக்கிக்கொள். எச்சரிக்கையை உன் மூத்த சகோதரன் ஆக்கிக்கொள். அசையாத நம்பிக்கையை உன் காவல் தெய்வமாக்கிக் கொள். வெற்றி தானாக வந்து உன்னை அடையும்'' என்ற பொருள்பட பதினெட்டாம் நூற்றாண்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காஞ்சி காமகோடி மடத்துக்கு விஜயம் செய்த அமைச்சர் அங்குள்ள பதிவேட்டில் தமது கருத்துக்களை எழுதும் காட்சி.

வாழ்ந்த பிரபல ஆங்கில எழுத்தாள மேதை ஜோசப் அடிஸன் என்பார் கூறியுள்ளார்.

அடிஸனின் கற்பனைகளை அப்படியே கடைப்பிடிப்பவர் போல நடந்து கொள்பவர் தான் திரு. தொண்டமான். இந்த வயதிலும் அவருடைய தளராத உழைப்பு அனைவரையும் திகைப்பதைய வைக்கிறது. அவர் கொழும்பில் இருக்கும் நாட்களில் எல்லாம் காலை ஒன்பது மணிக்கே காரியாலயம் வந்து விடுகிறார். மாலை ஐந்தரை மணிவரையும், அதற்கு மேலும் அங்கிருந்து வேலை பார்க்கிறார். பிரமுகர்களைச் சந்திக்கிறார். கூட்டங்கள், மாநாடுகள் நடத்துகிறார். இரவில் அரச விருந்துகளுக்கும் ஆலோசனைகளுக்கும் செல்கிறார். பாராளுமன்ற நாட்களில், பாராளுமன்றத்துக்குத் தவறாது செல்கிறார். இதற்கிடையே பொதுக் கூட்டங்கள், கருத்தரங்குகள், திறப்பு விழாக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றில் அக்கறையுடன் கலந்து கொள்கிறார். சொற்பொழிவாற்றுகிறார். வாரமுடிவுகளில் மலைநாடு சென்று இ.தொ.கா. ஏற்பாடு செய்யும் பொதுக் கூட்டங்களிலும் ஏனைய நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கிறார். இடையிடையே வெளிநாடுகளுக்கும் சென்று அரச அலுவல்களைக் கவனித்துத் திரும்புகிறார். இப்படி தொடர்ந்து உழைப்பதற்கு யாரால் முடியும்?

அடிஸன் சொன்னார், வாழ்க்கையில் வெற்றியடைய வேண்டுமானால் ''தீராத உழைப்பை உன் உயிர் நண்பனாகக்கொள்'' என்று. அதன்படியே நடந்து வாழ்க்கையில் வெற்றிகளைக் குவித்துவருகிறார் தலைவர் தொண்டமான்.

இரண்டு கண்களும் தெரியாதவராகவும், இருகாதுகளும் கேளாதவராகவும் இருந்தும் உலக சாதனைகள் படைத்த ஹெலன் கெல்லர் என்ற அம்மையார் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?

We can do anything we want to do if we stick to it long enough, and work hard.

—*Helen Keller*

''நீண்டகாலம் ஒரு கொள்கையில் நிலையாக நின்று சோர்வின்றிப் பணிபுரிந்தால் நாம் செய்யவிரும்பும் எதையும் செய்து முடிக்கலாம்'' என்று கூறுகிறார் ஹெலன் கெல்லர்.

ஹெலனுடைய கூற்று முற்றும் சரியானதே என்பதை தலைவர் தொண்டமான் செயலில் செய்து காட்டியிருக்கிறார்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு இந்திய வம்சாவளி மக்களின் பிரஜா உரிமைகள், வாக்குரிமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறிக்கப்பட்டன. அவற்றை மீண்டும் பெறுவதற்கு திரு. தொண்டமான் அன்றே போராட்டங்களை ஆரம்பித்தார். நாற்பது ஆண்டுகள் இ.தொ.கா. மூலம் நிலையாக நின்று பலமாகப் போராடினார். பிரஜா உரிமை, வாக்குரிமைகளை மீண்டும் பெறவேண்டும் என்ற அவரது விருப்பப்படி வெற்றி பெற்றார். அவருடைய வெற்றியின் இரகசியம் என்ன என்பதற்கு இவை எடுத்துக் காட்டுகளாகும்.

தலைவர் தொண்டமான் தமது வாழ்நாளில் எத்தனையோ விதமான எதிர்ப்புகளைச் சந்தித்தார். இ.தொ.கா. அமைக்கப்பட்ட ஆரம்ப காலத்தில், அதை வளர்த்தெடுப்பதற்கு அவர்பட்ட பாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல. இ.தொ.கா. தளிர்த்து விடாதபடி நசுக்கிவிடுவதற்கு தோட்ட முதலாளிகளான வெள்ளைக்காரர்கள் முனைந்தார்கள். அதை முறியடித்து விட அரசாங்கம் திட்டங்களையும் சட்டங்களையும் தீட்டியது. போதாக் குறைக்குப் போட்டிச் சங்கங்கள், பலவிதமான சூழ்ச்சிகளையும், கழுத்தறுப்பு வேலைகளையும் செய்தன. இந்த எதிர்ப்புகளை எல்லாம் சமாளித்துத்தான் இன்றைய வெற்றிகளுக்கெல்லாம் அடிகோலினார் தலைவர் தொண்டமான்.

அவருடைய செயல்பாடுகள் நெப்போலியன் ஹில் என்ற அமெரிக்க அறிஞனின் கூற்றுக்கு கண்கண்ட உதாரணமாக மிளிர்கின்றன.

Don't be afraid of opposition. Remember that the kite of success rises against the wind of adversity, not with it.

—*Napoleon Hill*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எதிர்ப்புகளைக் கண்டு பயந்து துவண்டு விடாதே. வெற்றி என்ற பட்டம் எதிர்த்து வீசும் இடுக்கண் என்ற காற்றுக்கு முகம் கொடுத்துக் கொண்டுதான் மேலே மேலே ஆகாயத்தில் கிளம்புகிறது என்பதை மறந்து விடாதே'' என்பது தான் நெப்போலியன் ஹில் கூறியிருக்கும் பொன்மொழியாகும். எதிர்ப்புகளைச் சமாளித்துக் கொண்டு தான் தனது வெற்றிகளை நிலைநாட்டினார் தலைவர் தொண்டமான்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக தலைவர் தொண்டமானுடைய வெற்றியின் இரகசியம் இன்னொன்றிருக்கிறது. அதுதான் அவர் பின்னால் திரண்டிருக்கும் மக்கள் சக்தி.



முன்னாள் ஆந்திர தேச முதல் அமைச்சர் என்.டி. ராமராவ் அளித்த விருந்தில் அமைச்சர் தொண்டமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துலட்சம் மக்கள் இலங்கைவாழ் இந்திய வம்சாவளியினர் அவர் பின்னால் திரண்டு நிற்கிறார்கள். இவர்களில் ஆறு லட்சம் பேர் தோட்டத் தொழிலாளர்கள். இவர்கள் ஒரு கொடியின் கீழ் திரண்டு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற பலம் வாய்ந்த ஸ்தாபனத்தின் குரலுக்குக் கட்டுப்பட்டு எழுச்சி பொங்கும் மக்களை அடக்கி நிற்கிறார்கள். தலைவர் தொண்டமான் இடும் கட்டளையை நிறைவேற்றற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எப்போதும் எவர்-ரெடியாக நிற்கிறது. இ.தொ.கா. இடும் கட்டளையை ஏற்று செயல்பட ஆறு லட்சம் தொழிலாளர் என்றும், எந்நேரமும் தயார் நிலையில் உள்ளார்கள், இதுவே தலைவர் தொண்டமானுடைய வெற்றி சாதனைகளுக்கெல்லாம் பின்னணி உந்து சக்தியாகும். இந்த சக்தி, கத்தியை விட, துப்பாக்கியைவிட அதிக பலம் வாய்ந்தது. ஆட்சியாளர்களால் கூட அசைக்க முடியாதது. வெற்றியின் இரகசியமான இந்த ஒற்றுமை சக்தியை மேலும் மேலும் பலப்படுத்த வேண்டும் என்பதே தலைவர் தொண்டமான் செய்யும் போதனையாகும்.

தலைவர் தொண்டமான் இன்னும் எத்தனையோ வெற்றிகளை மலையக மக்களுக்குத் தேடித்தரக் கூடிய வல்லமை படைத்தவராகவே விளங்குகிறார். அவர் மேலும் வெற்றிகளைத் தேடித்தருவதற்கு மலையக மக்கள் அவர் கரத்தைப் பலப்படுத்திக் கொண்டே யிருக்க வேண்டும். இது எப்படிச் சாத்தியமாகும்? காங்கிரஸைப் பலப்படுத்தினால் மக்கள் சக்தி அதிகரிக்கும். மக்களைச் சிதற வைத்தால் பலம் குன்றிவிடும்.

இ.தொ.க. இன்று பலம் பொருந்திய ஒரு கட்டுக்கோப்பான ஸ்தாபனமாக விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதைப் பலவீனப் படுத்திவிட சில கோஷ்டிகளும், சில குட்டிக் கட்சிகளும் முயலுகின்றன. தங்களை வளர்த்துக் கொண்டஉ சுயலாபம் தேடுவதற்காக சிலர் இ.தொ.கா. வைப் பிரித்துப் பலவீனப்படுத்தப் பார்க்கிறார்கள். இமயமலை போல் எழுந்து நிற்கும் இந்த ஸ்தாபனம் நாலு கூறுகளாகப் பிரிந்தால் நாசம் தொழிலாளருக்குத்தான். வீழ்ச்சி மலையக மக்களுக்கத்தான். இந்த உண்மையை தொழிலாளர்கள் உணர்ந்து கொண்டு, பிரிவினைச் சக்திகளுக்கு இடமளிக்கலாகாது.

ஒற்றுமையை வளர்க்க வேண்டுமே தவிர ஒற்றுமையைச் சிதறடிக்கலாகாது. ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு'' என்று பாடினார் வரகவி பாரதி. ஒற்றுமையைக் கலைப்பவர்கள் மலையக சமுதாயத்தின் தாழ்வுக்கே உழைப்பவர்கள் ஆவார்கள்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதிக்ஞை செய்வோம்

தலைவர் தொண்டமான் தலைசிறந்த அரசியல் வாதி. தலைவர் தொண்டமான் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத உயர்ந்த அரசியல் சாணக்கியர் தலைவர் தொண்டமான் சாமர்த்திய சாலி. தலைவர் தொண்டமான் சிறந்த நிர்வாகி. தலைவர் தொண்டமான் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத நேர்மையாளர். தலைவர் தொண்டமான் அச்சம் என்பதே இன்னதென்று அறியாத ஒரு சுத்த வீரர். தலைவர் தொண்டமான் சிறந்த தொழிற்சங்க வாதி. தலைவர் தொண்டமான் சிறந்த ராஜ தந்திரி. எல்லாவற்றிற்கும் மேலாக, தலைவர் தொண்டமான் மனிதாபிமானம் நிறைந்த ஒரு மாபெரும் மக்கள் தலைவர்.

இப்படியான ஒருவர் கண்ட வெற்றியின் இரகசியம இ.தொ.கா. வின் பலமும் இ.தொ.கா வில் அங்கம் வகிக்கும் மக்களின் ஒற்றுமையும் தான்.

இ.தொ.கா வைப் பலப்படுத்துவோம். ஒற்றுமையை வளர்ப்போம். வேற்றுமையை முறியடிப்போம். தலைவர் தொண்டமான் மேலும் வெற்றி சாதனைகளைப் படைக்க அவருக்கு உறுதுணையாக நிற்போம். இவ்வாறு இ.தொ.கா. கொடியின் கீழ் ஒன்றிணைந்து நின்று அவருடைய 78 ஆவது பிறந்த தின விழாவில் அனைவரும் பிரதிக்ஞை செய்வோம்.

வாழ்க தலைவர் தொண்டமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

''வெற்றியின் இரகசியம்'' என்ற இந்த அருமையான நூலினை ஆற்றோட்டமான அழகு தமிழில், வேகமாகவும் வெற்றிகரமாகவும் ஆக்கித்தந்த ஆசிரியர் நீலமயிலோன் அவர்களுக்கும் -

நூலினைச் சிறப்பாகவும் கவர்ச்சியாகவும் ஓப்செட் முறையில் அமைத்துத் தந்த மிலக்ஸ் கிராபிக் மீடியா ஸ்தாபன அதிபருக்கும், மற்றும் றோயல் பிரிண்ட்ஸ் அச்சகத்தாருக்கும் —

இந்நூல் வெளிவருவதற்கு என்னோடு பக்கபலமாக நின்று ஓயாது உழைத்த என் நண்பர், இ.தொ.கா. கல்வி இயக்குநர், திரு. எம். சிவலிங்கம் அவர்களுக்கும் —

இந்நூல் உருவாவதற்கு கொழும்பில் வேண்டிய ஒத்தாசைகளைப் புரிந்த இ.தொ.கா. உபதலைவர் திரு. ஏ.எம்.டி. இராஜன் அவர்களுக்கும் —

எல்லாவற்றிற்கும் மேலாக, இந்நூலை வெளியிடும் கருத்தினைத் தந்து, தலைவர் தொண்டமான் அவர்களின் அங்கீகாரத்தையும் பெற்றுத் தந்த, அமைச்சர் அவர்களின் அந்தரங்கச் செயலாளர் திரு. பா. திருநாவுக்கரசு அவர்களுக்கும் —

என்னுடைய மனமார்ந்த நன்றியையும், கடப்பாட்டினையும் மிக்க பணிவோடும் அன்போடும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வணக்கம்.

வி. இராமகிருஷ்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெளியீட்டாளர் இவர்

வெற்றியின் இரகசியம் என்ற இந்த நூலை வெளியிடுபவர் திரு.வி. இராதாகிருஷ்ணன் ஜே.பி. இவர் நுவரெலியாவில் ஒரு பிரபல வர்த்தகராகவும், கிருஷிகராகவும், சமூக சேவையாளராகவும் விளங்குகிறார். அத்தோடு நுவரெலியா பிரதேச சபையில் ஓர் உறுப்பினராகவும் பதவி வகிக்கிறார்.

கந்தப்பளை கோட்லொஜ் தோட்டத்தைச் சேர்ந்த திரு. இராதாகிருஷ்ணன், திரு. வேலுசாமி, திருமதி பாக்கியம் அம்மாள் ஆகியோரின் புதல்வர். ஆரம்பக் கல்வியை தோட்டப்பாடசாலையிலும் பின் உயர் கல்வியை நுவரேலியா திருத்துவக் கல்லூரியிலும் பம்பலப்பிட்டி செண்ட் பீட்டர்ஸ் கல்லூரியிலும் பயின்றவர்.

தந்தையின் தொழிலான விவசாயத்தில் தாமும் நாட்டங்கொண்டு உழைத்துவரும் திரு. இராதாகிருஷ்ணன் படிப்படியாகத் தமது வாழ்க்கையை உயர்த்தி, பொருளாதாரத்தில் ஸ்திரமான, ஓர் இடத்தைப் பிடித்திருக்கிறார்.

பிறருக்கு உதவி புரிவது என்பது, குறிப்பாக விவசாயிகளைக் கைதூக்கி விடுவது என்பது, இவரின் இரத்தத்தில் ஊறிய ஒரு பண்பாகும்.

இவர் அங்கம் வகிக்கும் சமூக சேவை அமைப்புகள் பலப்பல. இவர்

நுவரேலியா ரோட்டரிக் கழகத்தின் சமூக சேவை அத்தியட்சகர். ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய அறங்காவல் சபையின் உபதலைவர். இந்து கலாசார பேரவையின் தலைவர்.

இ.தொ.கா. வின் சேவையில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு மேலும் பல பணிகளைச் செய்து வருகிறார்.

தோட்ட லயன்களுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டத்தை முதன் முதலாக முன்நின்று நிறைவேற்றியவர் இவர். கோட்லொஜ் தோட்ட லயன்களுக்கு மின்சார இணைப்பை ஏற்படுத்திய முன்னோடி திரு. இராதாகிருஷ்ணன் ஆவார்.

எம். சிவலிங்கம்
கல்வி இயக்குநர் இ.தொ.கா

நுவரேலியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org